பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 21 ஞாயிற்றுக்கிழமை (04-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர்: 159



வடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திப்பதற்காக நேற்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய கண்காணிப்புக்குழுத் தலைவரும் (இடது) அவரது குழுவினரும்.

# புலிகளின் கடற்போக்குவரத்து; நேற்றைய பேச்சில் முடிவில்லை

## கண்காணிப்புக் குழுத் தலைவர் - தமிழ்ச்செல்வன் சந்திப்பு 3மணி நேரம் நீடித்தது

கிளிநொச்சி,மே4

வடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்து தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள புதிய வரைபு குறித்து விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நேற்று மூன்று மணி நேரம் ஆராய்ந்த போதும் இறுதி முடிவு ஏதும் எட்டப்படவில்லை.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியை வந்தடைந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரிக்வே டெலிவ்சன் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நடுவப் பணியகத்தில் சந்தித்து மூன்று மணி நேரம் பேச்சு நடத்தினார்.

வடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்துத் தொடர்பாக கண்காணிப்புக் குழு தயாரித்துள்ள புதிய வரைபு குறித்தே இருவரும் நீண்ட நேரம் ஆராய்ந்தனர்.

புதிய வரைபில் சாதகமான விடயங்கள் ஏதும் இல்லாத காரணத்தால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பல சரத்துக்களை விடுதலைப் புலிகள் தரப்பு ஏற்கவில்லை என அறியவந்தது.

இந்த வரைபு குறித்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடன் கலந்துரையாடிய பின்னர் இதுபற்றி மேற்கொண்டு ஆராயலாம் என கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. எந்தவித திட்டவட்டமான முடிவும் எட்டப்படாத நிலையில் பேச்சுக்கள் முடிவடைந்தன.

யாழ்கோட்டையில் இராணுவமுகாம் அமைப்பதால், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு எடுத்துக் கூறினார்.

இந்த முகாம் அமைப்பதால் மக்களின் இயல்புநிலை சீகுலைவு ஏற்படும் என்றும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார். (ம-3-8-9)

# பேச்சை மீள ஆரம்பிப்பது குறித்து நோர்வே குழு அரசுடன் ஆராயும்

## இன்று கொழும்பு வருகிறது

கொழும்பு,மே4

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிசனும், குழு உறுப்பினரான எரிக்சொல்ஹெய்மும் இன்று கொழும்புக்கு வருகின்றனர்.

அரசு தரப்பு சமாதானக் குழு உறுப்பினர்களுடனும் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாட உள்ள இவர்கள் பின்னர் விடுதலைப் புலிகளையும் சந்தித்து இது பற்றிப் பேச உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தாதற்கு தமது அதிருப்தியையும் கவலையையும் வெளிப்படுத்தும் விதத்தில் பேச்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கரவெட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சுட்டுக் கொலை!

## பருத்தித்துறை - தும்பளை வீதியில் சம்பவம்

வடமராட்சி,மே4

கரவெட்டிப் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் ஈபிடிபி. அமைப்பின பருத்தித்துறை மாவட்ட அமைப்பாளருமான தர்மராசா ஜெயராசா (வயது45) நேற்றுமாலை 5.30 மணியளவில் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை - தும்பளை வீதியில் லூர்த்துமாதா கோயிலுக்கு அருகில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றிலேயே அவர் சுடப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

நேற்று முற்பகல் ஜீப் ஒன்றில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான கேசவன், உதயச்சந்திரன் ஆகியோருடன் தும்பளைப் பகுதிக்குச் சென்றார் ஜெயராசா. ஈபிடிபியின் உத்தியோகப் பத்திரிகையான 'மக்கள்குரல்' பத்திரிகையை விநியோகம் செய்யும் பணியில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அதன் பின்னர் பருத்தித்துறை நோக்கி அவர்கள் திரும்பிக்கொண்டி

(14ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக வேண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பம் அதுவே

## அதன் நாடாளுமன்ற உறுப்பினர் புலிகளிடம் தெரிவிப்பு



கிளிநொச்சி,மே4

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் விரைவில் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்பதே ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பம். அதனையே நான் புலிகளிடம் வலியுறுத்திக் கூறினேன்.

கிளிநொச்சியில் வைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜே. கஷனான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமானம் மூலம் நேற்றுக்காலை பலாலி வந்த அவர் அங்கிருந்து தரைவழியாக கிளிநொச்சிக்குச் சென்றார். அங்கு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இந்தக் கலந்துரையாடல் 12.30 மணிவரை நீடித்தது. இப்பேச்சில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி வோடர் வில்ரனும் கலந்து கொண்டார்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவும்-

வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்ப ஐரோப்பிய ஒன்றியம் வழங்க

(14ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சை தொடர வேண்டி மன்னாரில் பேரணி

மன்னார்,மே4

சமாதானப் பேச்சுத் தொடரவேண்டும் என்றும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரி மன்னாரில் நேற்று பேரணி ஒன்று இடம்பெற்றது.

3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியின் இறுதியில் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவருக்கும் அனுப்புவதற்கான மகஜர்கள் மன்னார் மேலதிக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

மன்னார் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணிக்கு மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் தலைமை தாங்கினார். காலை 10 மணிக்கு செபஸ்தியார் ஆலயத்தில் இருந்து பேரணி ஆரம்பமானது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமரின் கடிதத்தை நான் நிராகரித்துவிட்டேனா? முற்றிலும் தவறு என அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

## 'சுடர் ஒளி' பிரசுரிக்காத செய்தியை பிரசுரித்ததாகக் காட்ட முயற்சி

சமாதானப் பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு விடுதலைப் புலிகள் எழுதிய கடிதத்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறம் பதிலளித்திருந்தார். அந்தப் பதில் கடிதத்தை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நிராகரித்தார். என்ற சாரப்பட வெளியான செய்திகளை முற்றிலும் தவறானவை என்று அவர் மறுத்திருக்கின்றார்.

'தமிழ் நெற்' இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது. 'தமிழ் நெற்' மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'டெய்லி மிரர்' பத்திரிகையிலும் 'கல்வ் நியூஸ்'லும் வெளியான அத்தகைய தகவல் முற்றிலும் கற்பனையின் அடிப்படையில் வரையப்பட்ட பொறுப்பற்ற செய்திமுறை என்று மதியுரைஞர் பாலசிங்கம் தெரிவித்தார்.

"ரணில் விக்கிரமசிங்கவின் கடிதத்தை நிராகரித்த பாலசிங்கம், முக்கிய விடயங்களில் இருந்து பிரதமர் நழுவியுள்ளார் என்றும் தெரிவித்தார்." - என டெய்லி மிரர் தனது வெள்ளிக்கிழமைப் பதிப்பில் செய்தி வெளியிட்டிருந்தது.

இதேபோன்ற செய்தி 'டெய்லி மிரர்' பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையான 'சண்டே ரைம்ஸ்' வார இதழின் ஆசிரியரால் 'கல்வ் நியூஸிலும்' வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்களை புலிகளின் பேச்சுக்குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கம் தமிழ் பத்திரிகையும் உதயனின் சகோதரப் பத்திரிகையுமான 'சுடர் ஒளி' க்குத் தெரிவித்திருந்தார் என்று அப்பத்திரிகையை 'டெய்லி மிரரும்', 'கல்வ் நியூஸும்' மேற்கோள்காட்டியிருந்தன.

ஆனால், பாலசிங்கம் அத்தகைய கருத்துக்களைத் தெரிவித்தார் என தாங்கள் செய்தி ஏதும் பிரசுரிக்க

(14ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் உலமாக்கள் புலிகளிடம் வலியுறுத்து

## கிளிநொச்சியில் தங்கனை சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம்.மே4

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதனை இடைநிறுத்தியிருப்பது எமக்கு அதிர்ச்சியாகவும், கவலையளிப்பதாகவும் உள்ளது. அவர்கள் மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்ளவேண்டும்.

-இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றது காத்தான்குடி ஜம் இய்யதுல் உலமாக்கள் குழு. கிளிநொச்சியில் நேற்றுக்காலை 11 மணிமுதல் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின்போதே அவர்கள் இதனை வலியுறுத்தினர்.

கிளிநொச்சி அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரசியல்துறையைச் சேர்ந்த நிழுட்டன் மற்றும் தயா மாஸ்டர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

"தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான உறவு மேலும் பலப்படுத்தப்படவேண்டும். சில தீயசக்திகளின் சதியால் அண்மையில் திருமலை, மட்டு நகர் போன்ற இடங்களில் அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. இது போன்ற துரதிஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பது உறுதிசெய்யப்படவேண்டும். சமாதானத்தை நோக்கி தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து நடைபோட வேண்டும்." - இவ்வாறு இஸ்லாமிய அறிஞர்கள்குழு மேலும் வலியுறுத்தியது. (ம-8-9)

# இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

## புத்தளத்தில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு,மே4

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய பிரதேசங்களில் குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த அரச அதிபர்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

புத்தளம் செயலகத்தில் கடந்த வாரம் நடந்த கூட்டம் ஒன்றில் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன.

அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் வடக்கில் பணிபுரியும் அரச அதிபர்கள் பங்குபற்றினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பள்ளிக்குடா, நாச்சிக்குடா ஆகிய இடங்களில் முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவதில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் -

மன்னார் மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றல் மற்றும் இராணுவ முகாம் மீளமைத்தல் போன்ற விவகாரங்களால் மக்களை மீளக்குடியமர்த்துவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்தும் - அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் எடுத்துக்கூறினர்.

புத்தளம் பகுதியில் முகாம்களில் தங்கியுள்ள முஸ்லிம் மக்களை மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளைத் துரிதமாக்குவது என்று இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. (ம-3)

# ஆலயத்தில் திருட முயன்ற நபர் பொதுமக்களால் நையப்புடைப்பு!

யாழ்ப்பாணம்,மே4

கோப்பாய் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட ஆலயம் ஒன்றில் திருட்டு முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த ராஜதுரை ராஜசேகரம் என்ற அந்த நபர் மீதே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அவர் யாழ். நீதிவான் ஆர்ரி. விக்னராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

காயமடைந்த நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இந்த நபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

சிறைச்சாலை அதிகாரியின் காவலுடன் இவரை யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சை அளிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார். (ம-3)

# இந்துமாநாட்டை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் போட்டிகள்

## ப.நோ.கூ.சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே4

ஊர்காவற்றுறை பல நோ.கூட்டுறவுச் சங்கம் இரண்டாவது உலக இந்து மாநாட்டினை முன்னிட்டு தமது பிரிவைச்சேர்ந்த மாணவர்களிடையே பேச்சு, விணாடி வினா, பண்ணிசை (தனி), பண்ணிசை (குழு), இசையோடு பக்திப் பாடல் பாடுதல் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.

இதேவேளை - நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இந்து மாநாட்டை ஒட்டிய ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.

சங்கத்தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், சங்கத்தின் தலைமைப் பணிமனை பூரண கும்பம்வைத்து வாழை, தோரணங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டதுடன், நந்திக்கொடியும் ஏற்றிவைக்கப்பட்டது.

புளியங்கூடல் கிராம அலுவலர் மு.விஜயரத்தினம், ஊர்காவற்றுறை பல நோ.கூ.சங்க பொது முகாமையாளர் ந.ஜெயராசா ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். ஊர்காவற்றுறை பிரதேச கலாசார உத்தியோகத்தர் நந்திக் கொடியை ஏற்றி வைத்தார்.

சமய குரவர்கள் நால்வரும் அடங்கிய உருவப்படங்களும் சங்கத்தினால் அச்சிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது. (எ-6)

# இந்து மாநாட்டை முன்னிட்டு கிராமங்கள் எழுச்சிக்கோலம்

வலி.தெற்கு,மே4

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு யாழ்குடாநாட்டில் உள்ள சகல கிராமங்களும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளன.

இந்து மக்களிடையே சமய உணர்வும், இந்து கலாசார உணர்வு மற்றும் சிந்தனைகளை வளர்க்கவும், மேலோங்கச் செய்யவும் என நடைபெறும் இம்மாநாட்டுக்கு மக்கள் மதிப்பளித்து எழுச்சியுடன் பங்குபற்றி வருகின்றார்கள்.

ஆலயங்கள், கல்விச்சாலைகள், அரச காரியாலயங்கள், சனசமூக நிலையங்கள், அறநெறி நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் அனைத்திலும் இந்து மாநாடு தொடர்பான நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆலயவீதிகள், பொது வீதிகளை எல்லாம் மக்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்து தூய்மை பேணப்படுவதுடன் மாவிலை வரவேற்பு பதாகைகள், நந்திக்கொடி, மகரதோரணங்கள் என்பவற்றால் அலங்காரம் செய்துள்ளனர். அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்களால் எல்லாம் இந்து சமயம் தொடர்பான பல்வேறு போட்டிகள், சமயச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், அன்னதானம், தாகசாந்தி நிலையம் அமைத்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றுவருகின்றன. (எ-152)





கிளிநொச்சிக்கு நேற்று வருகைதந்த காத்தான்குடி உலமாக்கள் குழுவினரை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் வரவேற்பதை முதலாவது படத்திலும், அங்கு நடந்த சந்திப்பில் உலமாக்கள் குழுவினரும் விடுதலைப் புலிகளும் கலந்துரையாடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். *படங்கள்: தேவா*

## நீர்கொழும்பில் இருந்து மன்னாருக்கு

# ஜெலிக்நைட் குச்சிகளை கடத்த முயன்ற இருவர் கைது

கொழும்பு,மே4

நீர்கொழும்பில் இருந்து மன்னாருக்கு பெரும் எண்ணிக்கையான ஜெலிக்நைட் குச்சிகளைக் கடத்த முயன்ற இருவரை நீர்கொழும்பு பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த வானை ஒன்றை சோதனைச் சாவடியில் நின்ற பொலீஸார் வழிமறித்துச் சோதனையிட்டபோது அதற்குள் இருந்து இந்த ஜெலிக்நைட் குச்சிகள் மீட்கப்பட்டன.

வானையும் அதில் இருந்த இருவரையும் பொலீஸார் தடுத்து வைத்துள்ளனர். (ம-3)

## நல்லை ஆதீனத்திலும், துர்க்கா மணிமண்டபத்திலும்

# பிராந்திய இந்து மாநாடு 2 தினங்கள் நடைபெறும்

வலி.தெற்கு,மே4

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடத்தும் 2ஆவது உலக இந்து மாநாட்டையொட்டிய யாழ் பிராந்திய இந்து மாநாட்டு நிகழ்வுகள் இம்மாதம் 9ஆம்,10ஆம் திகதிகளில் நல்லை ஆதீனம், நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

இவ்விரு தினங்களும் எழுச்சி ஊர்வலம்,திருமுறை அரங்கு,மகளிர் அரங்கு, இளைஞர் அரங்கு, கவியரங்கு, விசேட உரைகள்,கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

### முதலாம் நாள் நிகழ்வுகள்

இம்மாதம் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு திருநெல்வேலி சிவன் கோயிலில் இருந்து நல்லை ஆதீனம் வரை மங்களகரமான எழுச்சி ஊர்வலம் இடம்பெற்றுக் காலை 9 மணிக்கு நல்லை ஆதன மண்டபத்தில் மாநாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

அன்றைய தினம் திருமுறை அரங்கு, இளைஞர் அரங்கு, கவியரங்கம், பண்ணிசை என்பன விசேடமாக இடம்பெறும்.

யாழ்பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி சிவஸ்ரீ சு.மகேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோரின் ஆசியுரைகளும், யாழ். அரசஅதிபர் செ.பத்மநாதன் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க.மோகனதாஸ் ஆகியோரின் வாழ்த்துரையும் இடம்பெறும்.

தொடக்க உரையை கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்துவார்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாநாட்டை தொடக்கி வைத்து சிறப்புரையாற்றுவார்.

### திருமுறை அரங்கு

முற்பகல் 11 மணிக்கு திருமுறை அரங்கு, சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும்.

இராமநாதன் நுண்கலை கழக மாணவிகளின் பண்ணிசை, ச.விநாயகமூர்த்தியின் 'திருநெறிய தமிழ்' - சிறப்புரை என்பன நடைபெற்று கட்டுரை, பேச்சு, பண்ணிசை என்பவற்றில் மாவட்ட அடிப்படையில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்படும்.

### இளைஞர் அரங்கு

பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் இளைஞர் அரங்கு ஆரம்பமாகும்.

கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் வாழ்த்துரை வழங்குவார். இந்து சமய விழுமியங்கள், இந்துசமய சமகால செல்நெறிகள், இந்து இளைஞரின் பங்கும் பணிவும் தொடர்பான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடைபெறும்.

மாலை 5.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவா நா.வி.முநரைத்தினத்தின் பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்.

மாலை 6.30மணிக்கு 'சைவமும் தமிழும் எங்களின் கண்கள்' என்ற விடயம் பற்றிய கவியரங்கமும் அதனைத் தொடர்ந்து சிறப்புரை, நாடகம் என்பனவும் இடம்பெறும்.

### இரண்டாம்நாள் நிகழ்வுகள்

10 ஆம் திகதி சனிக்கிழமை நிகழ்வுகள் நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் ஆரம்பமாகும்.

காலை 9.15 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இளைப்பாறிய அதிபர் திருமதி ம.திருச்சிற்றம்பலம் ஆகியோரின் வாழ்த்துரைகள், 'மகளிர் வாழ்வியலில் வழிபாடு', 'மகளிர் வாழ்வியலில் சமயம்', 'மகளிர் வாழ்வியலில் மதம்' என்ற தலைப்புகளிலான கருத்தரங்கு, கலந்துரையாடல் என்பன இடம்பெறும்.

பிற்பகல் 2.30மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் வாழ்த்துரை வழங்குவார்.

தமிழகத்தில் இருந்து வருகைதந்துள்ள அறிஞர்கள், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்துவர்.

மாநாட்டையொட்டி யாழ்ப்பாணத்தில நடத்தப்படும் போட்டிகளில் வெற்றி

(13 ஆம் பக்கம் பார்க்க)

# 'வீடியோ சென்ரர் உரிமையாளருக்கு!

யாழ்ப்பாணம்,மே4

புதிய திரைப்படங்களை வெளியிட விரும்பும் வீடியோ சென்ரர் உரிமையாளர்கள், அதற்கான பதிவை மேற்கொண்டு அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கம் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில், பலாலி வீதியில் உள்ள சங்க அலுவலகத்திலும் - வடமராட்சியில், நெல்லியடியிலுள்ள சங்க அலுவலகத்திலும் - இன்று ஞாயிற்றுக்கிழமையும், நாளை திங்கட்கிழமையும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## கணனிகள் அன்பளிப்பு

கோப்பாய்,மே.4

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி கணனிப்பிரிவிற்கு, அப்பாடசாலையின் பழைய மாணவர்சங்க கனடா கிளையினர் அண்மையில் 15 கணனிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

அவற்றைக்கொண்டு இப்பாடசாலையில் உள்ள தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிக்கான மையம் விரிவாக்கப்பட்டுள்ளது. (ம-72)

## இந்து மாநாட்டு நிகழ்வுகள்

காரைநகர்,மே4

உலக இந்து மாநாட்டை முன்னிட்டு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் விசேட சமய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அலுவலகத்தில் விசேட பொங்கல் பூசையைத் தொடர்ந்து காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்களின் ஆசியுரையும், சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (எ-73)

★ ★ ★

வலி.தெற்கு,மே4

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மாணவர் மன்றத்தின் ஆதரவில் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்டுவரும் இந்துசமய எழுச்சி விழாவில் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் சமூக ஜோதி கா.கணேசதாசன் 'இந்துவாக வாழ்வோம்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

பாடசாலை அதிபர் திருமதி த. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும் இடம்பெறும். (எ-152)



சிரியாவுக்குச் சென்றுள்ள அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் அந்தநாட்டு வெளியுறவு அமைச்சர் பருக் அல்-ஷாராவை சந்தித்துப் பேசிய போது எடுக்கப்பட்ட படம்.

# புஷ், பிளயர் போர்க் குற்றங்கள்: சுவிட்சர்லாந்தில் வழக்குப் பதிவு

பேர்ன்,மே4

அமெரிக்க அதிபர் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் ஆகியோர் மீது போர்க் குற்றங்கள் புரிந்ததாக சுவிட்சர்லாந்தில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்ட ஈராக் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆதரவு இயக்கம் என்ற அமைப்பு இந்த வழக்கைத தொடர்ந்துள்ளது.

அமெரிக்க, பிரிட்டிஷ், ராணுவம் படையெடுத்ததால், ஈராக்கில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் சார்பில் இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்தது.

புஷ், பிளயர் ஆகிய இருவரும் பதவியில் இருக்கும்போது சுவிட்சர்லாந்துக்குள் வந்தால் கூட சட்டப்படி அவர்கள் மீது வழக்குத் தொடர முடியாது என்று அரசு வழக்கறிஞர் கருத்துத் தெரிவித்தார்.

கூட்டணிப் படைகளுக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் டாமி பிராங்க்ஸ் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் என்று பெல்ஜியத்தில் அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஈராக்கில் மார்ச் 20 ஆம் திகதி எடுக்கப்பட்ட போர் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட 19 ஈராக்கியர்கள் சார்பில் இந்த வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை -

1991 வளைகுடா போரின்போது குற்றங்கள் புரிந்ததாக அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் (தற்போதைய அதிபரின் தந்தை) மீதும் பெல்ஜியம் நாட்டில் மார்ச் மாதம் 7 ஈராக்கிய குடும்பங்கள் வழக்குத் தொடர்ந்துள்ளன. (ஐ)

# பாகிஸ்தானில் கைதான தீவிரவாதிகளில் அல்கெய்டா தலைவரின் உறவினரும் ஒருவர்

வாஷிங்ரன்,மே4

அல்கெய்டா தலைவர்களில் ஒருவரான காலித் ஷேக் முகமதின் உறவினர் உட்பட 6 அல்கெய்டா தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தான் அதிகாரிகள் இந்த வாரம் நடத்திய தேடுதல் வேட்டையின் போது இவர்கள் சிக்கினர். அல்கெய்டா தலைவர் ஷேக் முகமதின் உறவினர் அமர் அல்பலுச்சியும் கைதானவர்களில் ஒருவர். 2000 ஆம் ஆண்டு அமெரிக்க போர் கப்பலில் குண்டு வைத்தது தொடர்பாக இவர் தேடப்பட்டு வந்தார்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் விமானங்களைக் கடத்தி நடந்த தாக்குதலுக்குத திட்டமிட்டவர் காலித் தேஷக் முகமது. இவர் மார்ச் முதலாம் திகதி பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தற்போது கைதாகியுள்ள அவரது உறவினர் அமர் அல் பலுச்சிக்கு, அல்கெய்டாவின் சதித் திட்டங்கள் தெரிந்திருக்கும் என்று அமெரிக்கா கருதுகிறது.

விமானங்களைக் கடத்தி அமெரிக்காவைத் தாக்கியவர்களுக்கு இவர் தான் லட்சக்கணக்கான ரூபாவை அனுப்பியவர். அல்கெய்டா அமைப்புக்கு வரக்கூடிய நிதி உதவியைப் பற்றிய ரகசியங்களும் இவருக்குத் தெரிந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (ஐ)

## சீன நீர்மூழ்கி விபத்தில் 70 கடற்படையினர் பலி!

பெய்ஜிங்,மே4

சீனாவில் தீவுப் பகுதியொன்றில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நீர்மூழ்கிக் கப்பல் திடீர் பழுது காரணமாக சமீபத்தில் விபத்துக்குள்ளானது. அதில் இருந்த கடற்படை வீரர்கள் 70 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் முன்னாள் அதிபரும் மத்திய இராணுவக் குழுவின் தலைவருமான ஜியாங் ஜமீன், விபத்தில் இறந்த கடற்படை வீரர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் செய்தி அனுப்பியுள்ளார். (ஐ)

# 'சார்ஸ்' பரவாமல் தடுக்க சீனாவில் மக்கள் இயக்கம்

பெய்ஜிங்,மே4

'சார்ஸ்' பாதிப்பைத் தடுத்து நிறுத்த பொதுமக்கள் அணிதிரள வேண்டும் என்று சீன அதிபர் ஹூ ஜிண்டாவ் வலியுறுத்தியுள்ளார்.

சீனாவில் 'சார்ஸ்' நோயால் இதுவரை 330 பேர் உயிரிழந்தனர். இந்நோய் தாக்குதலுக்கு உள்ளான 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தனியிடத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

'சார்ஸ்' மேலும் பரவாமல் தடுக்க மக்கள் இயக்கம் தேவை என்று சீன அதிபரும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான ஹூ ஜிண்டாவ் கூறியுள்ளார்.

சீனாவில் டியான்ஜின் பகுதியில் தான் 'சார்ஸ்' பாதிப்பு அதிகம் உள்ளது. எனவே, இதை சார்ஸ் பாதிப்புப் பகுதி என அவர் அறிவித்தார். சார்ஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

சீன துணைப் பிரதமரும் சுகாதாரத் துறை அமைச்சருமான உயி, 'சார்ஸ்' நோய் சிகிச்சை மையங்களை வியாழக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். பிரதமர் ஜிபாவும் 'சார்ஸ்' பாதித்த இடங்களுக்குச் சென்று விவரங்களை நேரில் கேட்டறிந்தார். (ஐ)

# பெய்ஜிங்கில் 1,553 பேர் பாதிப்பு!

பெய்ஜிங்,மே4

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் 1553 பேர் 'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக பெய்ஜிங் நகர சுகாதாரத் துறை துணை இயக்குநர் லியாங் வான்னியன் தெரிவித்துள்ளார்.

14 கோடி பேர் வசிக்கும் பெய்ஜிங் நகரில் 'சார்ஸ்' பாதிப்பைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இன்னும் 10 நாளில் பெய்ஜிங் நகரில் சார்ஸ் நோயை அறவே இல்லாமற்செய்து விட முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சார்ஸ் பாதிப்புக்கு அஞ்சி பெய்ஜிங் நகரை விட்டு வெளியேறுவதற்கு கல்லூரி மாணவர்கள் தயாராக இருப்பதாக வெளியாகியுள்ள செய்தியை அவர் மறுத்தார்.

கல்லூரி மாணவர்கள் 7 லட்சம் பேரில் 39 பேருக்கு மட்டுமே சார்ஸ் பாதிப்பு உள்ளது. எனவே, மாணவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்றார் அவர். (ஐ)

## உலக அரங்கில்

### பஸ் அணையில் விழுந்து 50 தொழிலாளர்கள் பலி!

தென் ஆபிரிக்காவின் ஜோகன்ஸ்பேர்க் நகரில் மே தினவிழா கடந்த முதலாம் திகதி நடந்தது. இதில் கலந்துகொண்டு விட்டு 90 நகரசபை தொழிலாளர்கள் ஒரு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த பஸ் தட்டு தடுமாறி ஓர் அணைக் கட்டுக்குள் விழுந்தது.

அந்த பஸ்ஸில் இருந்த தொழிலாளர்கள் தண்ணீரில் மூழ்கினார்கள். இதில் 50 தொழிலாளர்கள் தண்ணீரில் மூழ்கிப் பலியாகிவிட்டனர். இதுவரை 20 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

பலியானவர்களுக்கு அதிபர் தபோ மெகி, மேதின பொதுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்தார்.

## போபால் விஷவாயு விபத்து:

# பாதிக்கப்பட்ட 2 இந்தியப் பெண்கள் அமெரிக்காவில் உண்ணாவிரதம்

நியூயோர்க்,மே4

போபால் விஷவாயு விபத்தில் பாதிக்கப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த ரஷீதா பீ, சம்பா தேவி ஆகிய இரு பெண்களும் அமெரிக்காவில் கால வரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

மத்திய பிரதேச தலைநகர் போபாலில் 1984 ஆம் ஆண்டு யூனியன் கார்பைட் நிறுவனத்தில் இருந்து வெளியேறிய விஷவாயுவால் 3 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் பாதிப்படைந்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் நஷ்டஈடு கோரி யூனியன் கார்பைட் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்தனர். இந்நிலையில், இந்நிறுவனத்தை அமெரிக்காவைச் சேர்ந்த மற்றொரு நிறுவனமான டோவ் கெமிக்கல்ஸ் விலைக்கு வாங்கியது.

யூனியன் கார்பைட் நிறுவனத்தின சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளிட்ட பொறுப்புகளைத் தாங்கள் ஏற்க இயலாது என டோவ் நிறுவனம் தெரிவித்தது.

இதை ஆட்சேபித்து நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்தில், பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதை எதிர்த்து அவர்கள் அமெரிக்கா, நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

போபால் விஷவாயு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி சதிநாத் சாரங்கி என்பவர் சர்வதேச அளவில் போராட்டம் நடத்தி வருகின்றார். ரஷீதா பீயும் சம்பா தேவியும் அவரை அணுகி இப்போராட்டத்தில் தங்களையும் இணைத்துக்கொண்டனர். அமெரிக்காவில் மன்ஹட்டன் நகரில் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போராட்டத்தில் 30 பேர் கலந்து கொண்டனர். மசாசூசெட்ஸ் பகுதியைச் சேர்ந்த 24 மாணவர்களும் இதில் அடங்குவர்.

மே 5 ஆம் திகதி வரை தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர அவர்கள் திட்டமிட்டுள்ளனர். மிச்சிகன் மாநிலத்தில் டோவ் நிறுவனத்தின் தலைமையகம் உள்ளது. மே 8 ஆம் திகதி அங்கு சென்று போராட்டம் நடத்தவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். (ஐ)

# சினிமா படத் தயாரிப்பாளர் ஜீவி அவரது இல்லத்தில் தற்கொலை!

சென்னை,மே4



பிரபல தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் ஜீவி என்கிற ஜி.வெங்கடேஸ்வரன் நேற்று சனிக்கிழமை சென்னை சேத்துப்பட்டில் உள்ள அவரது இல்லத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் பிணமாக மீட்கப்பட்டார். இவர் பிரபல இயக்குநர் மணிரத்தினத்தின் உடன் பிறந்த அண்ணன் ஆவார்.

55 வயதான இவருக்கு மனைவி, ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர். மனைவி தற்போது கொடைக்கானலில் உள்ளார். ஜீவி தற்கொலை செய்து கொண்ட விவரம் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஜீவி 'அக்னி நட்சத்திரம்', 'மௌனராகம்', 'தளபதி', 'நாயகன்', 'அஞ்சலி' உட்பட பல வெற்றிப் படங்களைத் தயாரித்தவர். சமீபத்தில் 'தமிழன்', 'ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே', 'சொக்கத்தங்கம்' ஆகிய படங்களைத் தயாரித்தவர். ஏராளமான திரைப் படங்களுக்கு முதலீட்டாளராகவும் இருந்துள்ளார்.

ஜீவியின் மரணத்துக்கான காரணம் தெரியவில்லையென உறவினர்கள் தெரிவித்தனர்.

தற்கொலை செய்வதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு அவரது உறவினர் ஒருவர் ஜீவியைத் தொடர்புகொண்டு பேசியுள்ளார். அவரிடம் வங்கியில் சிறிது வேலை உள்ளது. முடித்ததும் பின்னர் தொடர்புகொள்வதாகக் கூறியுள்ளார் ஜீவி.

ஜீவியின் மரணம் தமிழ் சினிமா உலகை மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கடைசியாக இவர் தயாரித்த மூன்று படங்கள் எதிர்பார்த்த வசூலைத் தராததால் இவருக்கு சுமார் 11 கோடி ரூபா (இந்தியப் பணம்) நஷ்டம் ஏற்பட்டிருந்தது என்று கூறப்படுகிறது. இந்த நஷ்டத்தை சரிசெய்ய இவர் பெருந்தொகைப் பணத்தை கடனாகப் பெற்றிருந்தார் என்று கூறப்படுகிறது. கடன் வழங்கிய வட இந்தியர் ஒருவரது தொந்தரவு தாங்க முடியாமலே அவர் தற்கொலை புரிந்திருக்கிறார் என்று பொலீஸார் கூறுகின்றனர். (ஐ)

# பலஸ்தீனரை கொல்வதை நிறுத்துக; இஸ்ரேலுக்கு அமெரிக்கா அறிவுரை

வாஷிங்ரன்,மே4

பலஸ்தீனத்தில் சிவிலியன்களை படுகொலை செய்வதைத் தடுத்து நிறுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி இஸ்ரேலுக்கு அமெரிக்கா அறிவுரை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சக அதிகாரி மேலும் கூறியதாவது:-

பலஸ்தீனத்தில் காஸா பகுதியில வியாழக்கிழமை இஸ்ரேல் படைகள் தாக்குதலால் பொதுமக்கள் கொல்லப்பட்டது குறித்து கவலை அடைந்துள்ளோம். பொதுமக்கள், மருத்துவமனை போன்ற இடங்கள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்திக் கொள்வதற்கு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்கும் படி இஸ்ரேலிடம் கோரப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட இஸ்ரேலுக்கு முழு உரிமையுண்டு. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது பலஸ்தீனம் நடவடிககை எடுக்கவேண்டும் என்றும் அந்த அதிகாரி கூறினார். (ஐ)

# பாத் கட்சியின் தலைவர் கைதான தகவலில் குளறுபடி

## கருத்துக் கூற அமெரிக்க மறுப்பு

பக்தாத்,மே4

சதாமின் அரசியல் கட்சியான பாத் கட்சியின் முக்கிய தலைவரும் அவரது புரட்சிகர தலைமைக் கவுன்ஸிலின் உறுப்பினருமான மிஸ்பாஸ் காதா ஹூாதி பக்தாத்தில் கைது செய்யப்பட்டதாக அமெரிக்க இராணுவம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

அமெரிக்கக் கூட்டணிப் படைகள் தேடும் 55 பேரின் பட்டியலில் ஹூாதி 41 ஆவது இடத்தில் இருக்கிறார். ஈராக்கின் முன்னாள் வர்த்தக அமைச்சர் முகம்மது மாதி அல்சாலி வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதாக கூட்டணிப் படைகள் தெரிவித்தன.

ஆனால், இவர் கைது செய்யப்பட்டதாக ஏப்ரல் 23 ஆம் திகதி அமெரிக்க இராணுவம் ஏற்கனவே அறிவித்திருந்தது. கூட்டணிப் படைகளோ வியாழக்கிழமை கைது என்று தற்போது கூறுகின்றன. இந்த முரண்பாடுகளுக்கான காரணம் குறித்து அமெரிக்க இராணுவம் உடனடியாக பதில் அளிக்க மறுத்துவிட்டது. (ஐ)

# பிரிட்டிஷ் படப்பிடிப்பாளர் காஸாவில் சுட்டுக்கொலை!

காஸா,மே4

பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஜேம்ஸ் மில்லர் பலஸ்தீனத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

காஸா பகுதியில் உள்ள அகதிகள் நிலைவரம் சம்பந்தமாக விவரணப் படம் ஒன்றை தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த சமயம் இஸ்ரேலியப் படையினரால் இவர் சுடப்பட்டார்.

விவரணப் படங்களைத் தயாரிப்பதில் விருதுகள் வென்ற ஜேம்ஸ் மில்லர், அமெரிக்காவின் செய்தி நிறுவனம் ஒன்றுக்கான படப்பிடிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த போதே கொல்லப்பட்டிருக்கிறார்.

இஸ்ரேலிய இராணுவ டாங்கி ஒன்றிலிருந்து சரமாரியாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மில்லர் கழுத்தில் ஏற்பட்ட காயத்தினால் உயிரிழந்தார்.

# OPTICIANS

**மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்**

24மணி நேரத்தில்....
உங்கள் மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
மிகச் சிறந்த ஐரோப்பிய
- பிறேம்கள்
- லென்ஸ்கள்
- கொன்ராக்ற் லென்ஸ்கள் (CONTACT LENSES)

தொடர்பு கொள்ளவும்.
கிழமை நாள்களில் மாலை 6.30 மணிவரையும்
சனிக்கிழமைகளில் பிற்பகல் 4.00மணிவரையும் திறந்திருக்கும்.

**A and A INTERNATIONAL**
இல.100, பௌத்தலோக மாவத்தை
(HSBCஇற்கு முன்னால்),
கொழும்பு. T.P: 595413

(C/27624)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 1921 - 10 - 08



மறைவு 2003 - 04 - 04

அமரர்

**சண்முகம்பிள்ளை காசிப்பிள்ளை**

(நாத்தாண்டியா, வவுனியா வர்த்தகர்)


04.04.2003 அன்று எமை விட்டுப்பிரிந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய மணற்காட்டு கும்பநாயகியை இறைஞ்சுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தற்காலிக முகவரி:*
எண்ணாங்கப்பிட்டி,
காரைநகர்.
*நிரந்தர முகவரி:*
தங்கோடை,
காரைநகர்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
*39, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*

(17339)

## 31ஆவது நினைவு நாள்



**அமரர் அம்பலம் செல்லத்துரை**

**(யாழ். வசாவிளான் 2ஆம் வட்டாரம்)**

தோற்றம் 16-07-1918

மறைவு 04-04-2003

திதி 04.05.2003 (திருதியை)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - வானுறையும்
தெய்வத்துள் ஒன்றான ஐயாவே!
வையத்துள் நாம் வாழும் வரை - நீங்கள்
தெய்வமாய் வழிகாட்டி நிற்பீர்கள்."

உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

*"கலையகம்"*
*ஆவரங்கால்,*
*புத்தூர்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்.

(17345)


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையிலும், சங்கானைக் கிளையிலும் 31-12-1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில்

## பகிரங்க ஏல விற்பனை

செய்யப்படும்.

| கிளைகளின் விவரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| வல்வெட்டித்துறை | 10-05-2003 இருந்து - → 12-05-2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |
| சங்கானை | 13-05-2003 இருந்து - → 17-05-2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை |

யாழ்.பிரதேசமுகாமையாளர்,
மக்கள் வங்கி.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

(சி-27645)



# கியுபிட் போட் KUPID FORT

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு) Capsules



பிரசித்தி பெற்ற ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை. சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ் காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத்தன்மையைப் போக்க.
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு.
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

யாழ்ப்பாணத்தில்:

| | |
|---|---|
| ஜெகன் பார்மஸி | 021-222-3191 |
| சிற்றி மெடிக்கல்ஸ் | 021-222-2198 |
| தங்கவேல் பார்மஸி | 021-222-3367 |

(17406)

உதயன்

# இங்கும் ஒரு மகாபாரதம்!

கொழும்பில் நேற்றுமுன்தினம் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு குறிப்பிட்ட சில கருத்துக்கள் விசேடமாக நோக்கப்பட வேண்டியவை. பேரினவாதக் கூச்சல் போடும் சிங்கள இனவாதிகளுக்குப் போதிக்கப் பட வேண்டிய பாடத்தை அவர் அங்கு உரைத்திருக்கின்றார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்துக்கு ஒப்பீடு செய்வதற்கு சிங்களத் தலைவர் ஒருவர் மகாபாரதத்தைக் கையாண்டிருப்பதும், குருஷேத்திரப் போரை மேற்கோள்காட்டியிருப்பதும் புதிய அம்சங்கள்.

இலங்கை இனப்பிரச்சினையால் எழுந்துள்ள யுத்தத்தை மகாபாரதப் போருடன் பிரதமரே ஒப்பிடுகின்றார்.

அங்கு கௌரவர்கள் நூற்றியொருவர்; பெரும்பான்மையினர். பாண்டவர்கள் ஐவர்; சிறுபான்மையினர்.

இங்கு சிங்களவர்கள் பெரும்பான்மையினர்; தமிழர்கள் சிறுபான்மையினர்.

பாரதத்தில் பாண்டவர்கள் தங்களுக்கு உரிமையான பங்கைத் தருமாறு கௌரவர்களிடம் கேட்டனர்; கௌரவர்கள் மறுத்தனர்.

சரி பங்கைத் தராவிட்டால் ஐந்து ஊர்களை - குறைந்தது ஐந்து கிராமங்களையாவது - தாருங்கள் என்று பாண்டவர்கள் கோரினர். ஆனால், இன்று இலங்கைத் தமிழர்களுக்குரியதைக் கொடுக்க மறுக்கும் பெரும்பான்மைச் சிங்களவர்கள் போல - கௌரவர்கள் அன்று மறுத்தனர். விளைவு - குருஷேத்திரப் போர் வெடித்தது.

"பாண்டவர்கள் கேட்டதுபோல ஐந்து கிராமங்களையாவது கொடுத்திருந்தால் பாரத யுத்தம் நிகழ்ந்திருக்காது; பெரும் இரத்தக் களரி ஏற்பட்டிருக்காது. அன்றைய நிலைபோல இன்று இலங்கையிலும் இரத்தக்களரி ஏற்பட்டுள்ளது. குருஷேத்திர யுத்தம் முடிய 18 நாள்கள் சென்றன. ஆனால், நமது நாட்டில் இருபது வருடங்கள் பிடித்துள்ளன" - என்று பிரதமர் இந்து மாநாட்டில் தமது உரையில் தெரிவித்திருக்கிறார்.

அன்று ஐந்து கிராமங்களையாவது தாருங்கள் என்று தமது உரிமையை விட்டுக்கொடுப்பதில் உச்சநிலையில் நின்றுகொண்டு பாண்டவர்கள் கோரியது போன்று, இன்று உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அமைப்பு என்ற கோரிக்கையை - உச்ச விட்டுக் கொடுப்போடு - தமிழர்கள் முன்வைத்திருக்கின்றார்கள்.

அன்று பாண்டவர்கள் தங்களுக்குரிய முழுப் பங்கைக் கேட்டார்கள். கௌரவர்கள் தர மறுத்ததால் கடைசியாக ஐந்து கிராமங்களையாவது தாருங்கள் என்ற கீழ் நிலைவரை அவர்கள் இறங்கி வந்தார்கள்.

இன்று தனியரசுக்கான தாங்கள் உரிமைக் கோரிக்கையை ஒருபுறம் வைத்துவிட்டு சமஷ்டி நிலைவரை கீழிறங்கி வந்து தமிழர்கள் தமது கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அன்று போரின் முடிவு என்ன? தர்மம் வென்றது; நீதி பிழைத்தது; உரிமை உரியவர்களுக்குக் கிடைத்தது. பெரும்பான்மை சிறுபான்மையை அழிக்கும் - அடக்கும் - அநீதி ஒழிந்தது.

இன்றும் - உரியவர்களுக்கு உரிய நியாயம் வழங்கப்படாவிட்டால் - அதுதான் நடக்கும். இதைத்தான் மகாபாரத ஒப்பீடு மூலம் பிரதமர் சுட்டிக்காட்ட வருகின்றார் என்பதைப் பேரினவாதக் கூச்சல் போடும் இனவாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

பாண்டவர்களும், கௌரவர்களும் சகோதரர்களே. இருந்தும் அவர்கள் யுத்தம் புரிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். யுத்த களத்திலே அர்ச்சுனன் யுத்தம் புரியத் தயங்கி நின்றபோது 'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே!' என்ற அர்த்தம் பொதிந்த பகவத் கீதையை அவனுக்கு உபதேசித்தார் பகவான் கிருஷ்ணர்.

இனவிடுதலை வேள்வியில் தம்முயிரை ஆகுதியாக்கி சுகம் புரியும் வீரத்தமிழ் மறவர்களின் நெஞ்சில் தைரியத்தையும், கடமையுணர்வையும், பொறுப்பையும் ஊட்டி நிற்பதும் அதே பகவத் கீதையின் சாராம்சம்தான்.

எனவே, இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் பல வகையிலும் ஒத்துப்போகும் பாரதக் கதையை பிரதமர் முன்வைத்திருக்கின்றார்.

பாண்டவருக்கு நீதி கிடைத்தது போல தமிழருக்கும் நீதி கிட்டும் என நம்புவோமாக!

# சங்கானை நிகரை ஆலயத்தில் நகை, பணம் நள்ளிரவில் திருட்டு

## மூலஸ்தான விக்கிரகம் பெயர்ப்பு

சங்கானை,மே4

சங்கானை நிகரை ஞான வைரவர் ஆலயத்தில் பல லட்சம ரூபா பெறுமதியான நகைகளும், பணம் உட்பட பல பொருள்கள் கடந்த 30ஆம் திகதி புதன்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளன.

ஆலயத்தின் தெற்குப் புறமாக உட்புகுந்த திருடர்கள் அலுவலக அறையில் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டகத்தை உடைத்து அதனுள் இருந்த தங்க நகைகள், பணம் என்பவற்றைச் சூறையாடியதுடன், இரும்பு அலுமாரியையும் உடைத்துச் சேதப்படுத்தியுள்ளனர்.

மூலஸ்தான வைரவர் விக்கிரகம் பெயர்க்கப்பட்டு அதன் கீழ் இருந்த ஐம்பொன் தகடும் திருடப்பட்டுள்ளது.

ஆலயத்தின் சகல கதவுகளும் நுட்பமான முறையில் திறக்கப்பட்டு திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தைச் சுற்றி சில யார் தூரத்தில் மக்கள் குடிமனைகள் அமைந்திருந்தும் எவருமே எதனையும் அறியமுடியாதபடி வெகு கச்சிதமாக திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர் எனக் கூறப்பட்டது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலீஸில் ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

(எ-29)

## நாட்டு நடப்பு

### எங்கே இந்தக் கடவுள்?

கடவுளை நேரில் கண்டவர் யாருமுண்டோ
கண்டவர் இங்கு வந்து சொன்னதும் ஏதுமுண்டோ
கடன்பட்டு திருவிழாவை செய்துவிட்டால்
கடவுளும் மனம் மகிழ்வதுண்டோ
இடம்பட ஆலயத்தைக் கட்டி
இன்னவன் உபயம் என எழுதிவிட்டு
குடமுழுக்கால் நீராட்டிவிட்டு
கோட்டில் வந்து வழக்கிடலாமோ
இடர்பட்டு தவிக்கும் ஏழை தன்னை
இன்முகத்தோடு வாழ வைத்து
நடைப்பிணமான உரியவர்க்கு
நாளும் உணவளித்தல் புண்ணியமே
அட இந்த மூலன் சொன்ன
அன்பே சிவம் என அறிந்த பின்பு
உடைமைகள் விற்று ஒரு கோபுரத்தை
ஊரினில் கட்டி என்ன பயன்?

- விகடகவி.

# ஈழத்து தமிழ்ப் புலவர் மாநாடு மே 14 முதல் நல்லை ஆதீனத்தில்

## மூன்று தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மே4

முதன்முதலாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஈழத்து தமிழ்ப் புலவர் மாநாடு இம்மாதம் 14 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் உட்பட ஆதீன முதல்வர்களும், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகைதரவுள்ள தமிழறிஞர்கள் பலரும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கவுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 'செந்தமிழ்ச் செல்வி' ஆசிரியர் இரா.முத்துக்குமாரசாமி, சென்னை இராணிமேரிக் கல்லூரி முனைவர் சரளா இராசகோபாலன், முனைவர் மலையமான், மலேசியாவைச் சேர்ந்த தமிழ்ப் பணிப்புலவர் முரசுராசன் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்குகொண்டு கருத்துரை வழங்குவர்.

மாநாட்டின் ஓர் அங்கமாக ஈழத்துத் தமிழ்ப் புலவர்களின் தமிழ் நூல் கண்காட்சியும் நடைபெறவுள்ளது. ஈழத்து தமிழ்ப் புலவர் பற்றிய குறிப்புகளும், சிறப்புக் கட்டுரைகளும் அடங்கிய சிறப்பு மலர் ஒன்றும் இந்த மாநாட்டில் வெளியிடப்படும் என மாநாட்டின் அமைப்பாளர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அறிவித்துள்ளார்.

(எ)

# கச்சாய்ப் பகுதியில் மணல் அகழ்தல்; கிராம மக்களே முடிவு எடுக்கட்டும்!

## தென்மராட்சி பிரதேச செயலர் அறிவுறுத்து

கொடிகாமம்,மே4

கச்சாய், அல்லாரை பிரதேசங்களில் மணல் அகழ்வதை தொடர்ந்து அனுமதிப்பதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் வகையில் உடனடியாக பிரதேச மட்டத்தில் குழு ஒன்றை அமைத்து அதன்மூலம் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டவிரோதமாக மண் அகழ்ந்தெடுக்கப்படும் கச்சாய், அல்லாரைப் பகுதிகளுக்கு கடந்த வியாழக்கிழமை நேரில் விஜயம் செய்த பிரதேச செயலர், மண் ஏற்றப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன் அப்பிரதேசத்தைச் சேர்ந்த கல்விமான்களையும் பிரதேச நலன் விரும்பிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போதே பிரதேச செயலர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இது குறித்து பிரதேச செயலர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்மராட்சியில் இயற்கை வளம் நிறைந்த இயற்கை அழகு கொண்ட பிரதேசங்களில் இந்தப் பிரதேசங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த துறைமுகங்கள், இயற்கையாக அமைந்த மேட்டுநிலங்கள், சிறு தீவுகள் போன்ற அமைப்பை இந்தப் பிரதேசங்கள் கொண்டுள்ளன.

மேற்படி பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்து சொற்ப காலத்திலேயே பெருமளவிலான வளங்கள் அழிக்கப்பட்டுள்ளதைக் கண்டு மனவேதனை அடைகின்றேன்.

கடந்த யுத்தகாலப் பகுதியில் இங்கு பெருமளவில் பனை, தென்னை மரங்கள் அழிக்கப்பட்டன. தற்போது மண் அகழ்வால் பெரும் எண்ணிக்கையான பனை மரங்கள், வடலிகள் சாய்ந்து விழுந்துள்ளன. பல தென்னை மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டு இன்றும் பல மரங்கள் எந்தநேரமும் சாய்ந்துவிழும் நிலையிலும் உள்ளன.

கடல் மட்டத்தை விட ஆழமாகவும் மணல் அகழப்பட்டு விற்பனை நடைபெற்றுள்ளது. இதனால், விவசாய நிலங்கள் உவர் நிலங்களாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், பாதிக்கப்படுவது எதிர்கால சந்ததியினர் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

சட்டவிரோத மணல் அகழ்வுகளில் ஈடுபடுபவர் பற்றி உடனடியாகக் குழு ஒன்றை அமைத்து எமக்குத் தெரியப்படுத்தவும். தொடர்ந்தும் இந்தப் பகுதிகளில் மணல் அகழ்வதா? இல்லையா? என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும் - என்றார்.

(எ-74)

# ஆசிரியர் - பெற்றோர் நல்லுறவு கல்வி வளர்ச்சிக்கு வித்திடும்

## விளையாட்டு விழாவில் தெரிவிப்பு

வடமராட்சி கிழக்கு,மே4

ஆசிரியர் - பெற்றோர் நல்லுறவு மூலமே மாணவர்களின் கல்வியையும், ஒழுக்கத்தையும் மேம்படுத்த முடியும்.

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மருதங்கேணி கோட்டக் கல்விப்பணிப்பாளர் பா.இரகுநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் வே.புவனேந்திரராசா தலைமையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இந்த வைபவத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் பெரும்பாலான நேரத்தைப் பெற்றோர்களுடனேயே கழிக்கின்றார்கள். எனவே பெற்றோர்களும் மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் அக்கறை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

மாணவர்கள் கற்பதற்கான வசதி, வாய்ப்புக்களை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆசிரியர் - பெற்றோர் நல்லுறவு மூலமே மாணவர்களின் கல்வியையும், ஒழுக்கத்தையும் மேம்படுத்த முடியும் - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு. கி.தாயகனும் உரை நிகழ்த்தினார்.

(எ-182)

## நாளை

சித்திரை 22
திங்கட்கிழமை
05.05.2003
திதி : சதுர்த்தி
பின்னிரவு 12.39 வரை
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முன்னிரவு 8.11 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 11.56-1.26
ராகுகாலம் : 7.26-8.56
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பிறரைத் துன்புறுத்துவோருக்கு ஓய்வு என்பதே கிடையாது.

## கைதிகளுக்கு அனுப்பிய பணம்

# கையாடியதை நிரூபித்தால் எம்.பி. பதவியை துறப்பேன்

## செய்தியாளரிடம் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம்,மே.4

கைதிகளுக்கு அனுப்பிய பணத்தை நான் கையாடியதாக நிரூபித்தால், எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உடனடியாக ராஜினாமாச் செய்வேன்.

- இவ்வாறு காட்டமாகக் கூறினார் தமிழ் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் தனது யாழ்.அலுவலகத்துக்கு செய்தியாளர்களை அழைத்து, இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் சிவாஜிலிங்கம் எம்.பி. மேலும் கூறியதாவது:

தென்பகுதியிலிருந்து வெளியாகும் வாரப்பத்திரிகை ஒன்றில் எனக்கு அவதூறை ஏற்படுத்தும் வகையில், உண்மைக்குப் புறம்பான செய்தியொன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான எனது மறுப்பை சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு அனுப்பி வைத்துள்ளேன் (அதன் பிரதி பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டது) அந்தச் செய்தியில் கூறப்பட்ட தகவல் உண்மையென நிரூபிக்கும் பட்சத்தில் நான் எனது எம்.பி.பதவியைத் துறப்பேன் - என்றார் அவர்.

(எ-9)

## CALLING FOR QUOTATION

Quotations are hereby called for supply and installation of the undermentioned type of Air Conditioner to Teaching Hospital, Jaffna.

01. 36,000 BTU Spilit Type - 02 Nos.

02. 24,000 BTU Window Type - 01 No.

Quotations may be self prepared and submitted personally or posted under registered sealed cover on or before 10.30 a.m. on 13.05.2003 Quotation received after this date and time will be rejected.

Dr.S.Sathurmugam,
Director.
T.H. Jaffna.

(சி-27675)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1964 - 05 - 22

மறைவு 2003 - 04 - 02

தோப்புக்காடு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் இந்தியாவில் சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சிவசுப்பிரமணியம் சண்முகநாதன்**

திதி: 04-05-2003

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

தாய், மனைவி, பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார்.

தோப்புக்காடு, காரைநகர். (17450)

உலகப் புகழ்பெற்ற இமாமி தயாரிப்புகள் இப்பொழுது... யாழ்.நகரிலும்!





**இமாமி**

நேச்சுரலி ஃபேயர் பேர்ல்ஸ்

- அசல் முத்துக்களும்
- 11 அரிய மூலிகைகள்

கொண்ட

சிவப்பழகு கிறீம்

பாவிப்பதனால்

- ☑ முகப்பரு அடையாளங்கள் கொண்ட சருமம் என்ற கவலை இனி இல்லை
- ☑ கண்ணின் கீழ் கருவளையம் இனி இல்லை
- ☑ முகத்தில் கரும்புள்ளிகள் இனி இல்லை

அழகிய வெண்மையான மிருதுவான சருமம் 6 வாரங்களில்!

வாங்குவோருக்கு Vitmine & Gell இலவசம்

சந்தைப்படுத்துவோர்:
**HARCOURTS(PRIVATE)LTD.**
No:14, Station Road,Dehiwala.
T.P: 074 - 200063 074 - 200064

**ஹிமானி**

**GOLD TUMERIC CREAM**

- கஸ்தூரி மஞ்சள்
- தங்கத் தூள்
- குங்குமப் பூ
- அரிய மூலிகைகள்

ஆயுர்வேத் கிறீம்

- ☑ நச்சுத்தன்மை அகற்றி பொலிவான முகத்தோற்றம்
- ☑ என்றும் இளமையான சருமம்
- ☑ மாசுமறுவற்ற சருமம்

தங்கத்தூள் அடங்கிய Yell இலவசம்

யாழ்.முகவர்:
**JEGHAN PHARMACY**
**ஜெகன் பார்மஸி**
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021- 2222194

**ஹைஏஸ் வான் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள ஹைஏஸ் (HIACE) வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
**ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்,**
பஸ்நிலையம், பருத்தித்துறை. (17456)

**சுஷானி மொபைல்ஸ் (SUZANY MOBILES)**

**Mobile Phone Unlocking Repairing**

கணனி திருத்துதல், கணனி மென்பொருள் ஏற்றிக்கொடுத்தல், கணனி கிறபிக் டிசைனிங் செய்து கொள்ளலாம்.

விவரங்களுக்கு:
0777 - 631103
0777 - 892236 (17361)

**தேசிய ஆங்கில டிப்ளோமா (NDET, NDEW, NDEC)**

பாடநெறி மற்றும் பயிற்சி ரூபா 25 மட்டும்

ரூபா 12.50 இற்கான இரண்டு தபால் தலையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**Psalms Technologies (Pvt.) Ltd.**
22-1/3Galle Road, Dehiwala

**தொலைபேசி விற்பனைக்கு**

மோட்டறோலா தொலைபேசியும் BOX உம் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**ம.சுகுணன்,**
ஊரெழு கிழக்கு,
ஊரெழு.
(வாணி தொலைத்தொடர்பு நிலையம்) (17486)

**கணிதம் I&II**

தரம் 10 கடந்த வருடம் மாவட்ட ரீதியாக நடைபெற்ற ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்கள் 16, விடைகளுடன் வெளிவந்துள்ளது. தரம் 11மாணவர்களுக்கு மீட்டல் செய்ய உகந்தது. விலை ரூபா 150/-. மணியோடர் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவுண்டு.

தரம் 11 வினாத்தாள்கள் விரைவில் வெளிவரும் தொடர்புகளுக்கு.

**Mathematical Publication**
30, Galpotha Street,
Kotahena.
01 448912, 0777179495

பெயாரோஸ் சுப மாங்கல்யம்

## உங்கள் திருமணச் செலவில் பெரும் பகுதியை நாம் ஏற்போம்..



உங்கள் திருமணத்தை வெகு விமரிசையாக நிகழ்த்த பெயாரோஸ் விரும்புகிறது. உங்களுக்கு பிடித்த விதத்தில், பிடித்த இடத்தில் திருமணத்தை நடத்தலாம். ஆனால் இந்த வருடத்தில் நடக்க வேண்டும் என்பதே எமது ஒரே வேண்டுகோள்.

- மணப்பெண்ணின் புடவை • தங்கச் சங்கிலி • பாதணிகள்
- தோழியர் இருவரின் புடவைகள் • ஆபரணங்கள் • பாதணிகள்
- முக அலங்காரம் • தலையலங்கார ஆலோசனைகள்
- மலர் அலங்காரம் • மணமேடை அலங்காரம்
- மேசை அலங்காரம் • திருமண கேக்
- திருமண ஸ்ரக்சர் கேக் • திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள்
- புகைப்படங்கள்/வீடியோ படங்கள்
- 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள்

இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்

உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறையுடன் இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

பெயாரோஸ் சுப மாங்கல்யம், த.பெ. 1262, கொழும்பு.
முடிவுத் திகதி 2003 ஆகஸ்ட் 31.


அழகுக்கலை ஆலோசனைகளை வழங்கும் அனுசரணையாளர்கள்
**Salon Nayana**

**Fair Rose**
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste



மென்மையான சருமத்திற்கு வெண்மையான முகத்திற்கு

PHOENIX O&M 0147 Licence No: G/38/2003



# அப்பு, ஆச்சி ஆண்ட மண்ணில்....

5 கீரிமலையில் பனங்கட்டித் தொழிற்சாலை ஒன்றும் இருந்தது. இங்கு தினமும் பனங்கட்டி காய்ச்சப்பட்டது. குடாநாட்டில் பனம் பொருள் உற்பத்தி கூடுதலாக குடிசைக் கைத்தொழிலாகவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வலிகாமம் வடக்கு என்றவுடன் அனைவருக்கும் கண்முன்னே தோன்றுவது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் சரித்திரப் பிரசித்திவாய்ந்தது. சிங்களவர்களின் வரலாற்றைக் கூறும் பௌத்த நூலான மகாவம்சத்தில் கூட மாவிட்டபுரத்தைப் பற்றியும் மாருதப்புரவீக வல்லியைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் பஞ்சரத பவனி இடம்பெறும் இந்து ஆலயங்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முதன்மைவாய்ந்தது. இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களிலேயே உயரமான கோபுரத்தைக கொண்டிருப்பதும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்தான். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கோபுரத்தின் உயரம் 81 அடி. இக்கோபுரத்தைக் கட்டுவித்தவர் நாகலிங்கம் என்ற வீரசைவர். இவர் ரங்கூனில் வாழ்ந்துவிட்டு இலங்கை திரும்பியமையால் ரங்கூனார் எனவும் அழைக்கப்பட்டார். இலங்கையில் இருபத்தைந்து நாள்கள் மஹோற்சவம் நடைபெறும் கோவில்களிலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முதன்மைவாய்ந்தது. முன்னொரு சமயம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வேட்டைத்திருவிழாவின்போது புகழ் பூத்த யாழ்ப்பாணக் கவிஞர்கள் இருவர் கோவில் வீதியில் சந்தித்தனர். சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர், இருபாலை சேனாதிராயக் கவிராயர் இருவருமே வேட்டைத் திருவிழாவில் சந்தித்த கவிஞர்கள். இருவரும் அந்த இடத்திலேயே கவிதை பாடுகின்றனர். முதலில் முத்துக்குமாரக் கவிராயர் பாடுகிறார்.

முடிவி லாதுறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவில் மீதுவந்
தடைய வோர் பெண்கொடி காமத் தாளசைத்
தானைக் கோட்டை வெளிக்கட்டுடை விட்டாள்
உடுவிலான் வரப் பன்னாலையான் மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்தில்
தடைவிடா தனை யென்றுப லாலிகண்
சாரவந்தனள் ஓரிள வாலையே.

இப்பாடல் பார்ப்பதற்கு யாழ்ப்பாணத்து ஊர்ப்பெயர்களைக் குறிப்பது போல் அமைந்துள்ளது. ஆனால், இப்பாடலின் பொருள் வேறு என்கிறார் பண்டிதமணி. அடுத்து சேனாதிராயக் கவிராயர் பாடுகிறார்.

திருவர்கும் நல்லைநகர் செவ்வேற் பெருமானார்
இருபாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ரம்மானை.
இருபாலைக் குயத்தியரோ டின்பமுற்றா ராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க அம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்க அம்மானை.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழாவிற்கு தென்னிந்தியப் பாடகர்கள் வந்து கச்சேரி வைப்பது வழக்கம் கடைசியாக கேபி. சுந்தராம்பாள், பித்துக்குளி முருகதாஸ் ஆகியோர் வந்து கச்சேரி வைத்தது ஞாபகமிருக்கிறது. கே.பி.சுந்தராம்பாளின் கச்சேரியின்போது முருகன் சுந்தராம்பாளுக்குக் காட்சிகொடுத்ததாக மறுநாள் ஈழநாடு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

வலிகாமம் வடக்கின் பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரம். வலிகாமம் வடக்கில் உள்ள தோட்டங்கள் சிலவற்றில் சூத்திரக் கிணறுகளும் காணப்பட்டன. சூத்திரக் கிணறு பற்றி பெரும்பாலானோருக்குத் தெரிந்திருக்காது என்பதால் சூத்திரக் கிணறு பற்றியும் சிறு விளக்கமளிக்கலாம் என நினைக்கின்றேன்.

சூத்திரக் கிணறுகள் மிக ஆழமாக இருக்கும். கிணற்றின் மேற்பகுதியில் கப்பிபோடப்பட்டு கப்பியில் இரும்புச் சங்கிலி கொழுவியிருக்கும். சங்கிலியின் இரு முனைகளிலும் இரு பாரிய வாளிகள் பிணைக்கப்பட்டிருக்கும். வாளியின் விளிம்பில் நீர் தானாக ஊற்றக்கூடியவாறு செவி பொருத்தப்பட்டிருக்கும். வாளி தானாகச் சரிந்து நீரைச் சரிக்கும் இடத்தில் தொட்டியொன்று கட்டப்பட்டிருக்கும். கிணற்றிலிருந்து சற்றுத் தூரத்தில் இரு மாடுகள் நுகத்தடியில் கட்டப்பட்டிருக்கும். நுகத்தடியும் கப்பியும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும். மாடுகள் கிணற்றைச் சுற்றிச்சுற்றி வரும். அப்போது இருவாளிகளும் மாறிமாறி மேலும் கீழும் சென்று நீரை இறைக்கும். ஒருவாளி சுமார் நூறு லீற்றர் தண்ணீர் கொள்ளளவுடையது. இம்முறை மூலம் நீர்பாய்ச்சும்போது தண்ணீர் கட்டுவதற்கு மட்டும் ஒருவர் நின்றால் போதும் கிணற்றடியில் ஆள் தேவையில்லை.

வலி.வடக்கு விவசாயிகள் பலரிடம் பழைய பிரித்தானிய தயாரிப்பான வூல்சிலி (Woolsley) நீர் இறைக்கும் இயந்திரங்கள் இருந்தன. இந் நீர் இறைக்கும் இயந்திரங்கள் இரண்டு அளவுகளில் இருக்கும். ஒன்று - சிறியது, மற்றையது - பெரியது. பெரிய நீர் இறைக்கும் இயந்திரத்தில் மாட்டைப் பூட்டியே விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரத்தை தோட்டத்துக்கு எடுத்துச் செல்வர். அவ்வளவு பெரியது இந் நீர் இறைக்கும் இயந்திரம்.

காங்கேசன் சிமெந்து ஆலையில கற்குழி (Quarry) தோண்டும்போது சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. கீரிமலை கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாக கீரிமலை காங்கேசன் துறை வீதிக்கும், கீரிமலை மாவிட்டபுரம் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. சுரங்கத்தினுள் சிறிது தூரம் சென்றதும் நீர் காணப்பட்டது. சுரங்கத்தினுள் போகப்போக நீர் மட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. இதன் காரணமாக சுரங்கம் பற்றிய மேலதிக ஆராய்ச்சியில் யாரும் ஈடுபடவில்லை. பின்னர் இப்பகுதியில் சிலர் தற்கொலை செய்துகொண்டதையடுத்து சுரங்கம் மூடப்பட்டது.

வலி.வடக்கில் உள்ள கலைக் கிராமங்களில் குரும்பசிட்டியும் ஒன்று. சைவத்தையும் தமிழையும் வளர்த்த கிராமங்களில் குரும்பசிட்டியும் முக்கிய இடத்தை வகிக்கிறது. நாடு போற்றும் பல அறிஞர்களும் கலைஞர்களும் பிறந்து வளர்ந்த ஊர். எனக்கு குரும்பசிட்டி உடனான தொடர்பு குறைவு என்பதாலும் குரும்பசிட்டி அறிஞர்கள் ஏற்கனவே குரும்பசிட்டிபற்றி எழுதியுள்ளதாலும் குரும்பசிட்டியைப பற்றி இத்தொடரில் விரிவாக எழுதவில்லை.

அரசியல் ரீதியாகவும், தமிழீழப் போராட்டத்துடனும் வலி.வடக்கு நெருங்கிய தொடர்பு உடையது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆரம்பகால போராட்ட நடவடிக்கைகள் வலி. வடக்கிலேயே ஆரம்பமாகின. விடுதலைப் புலிகளின் ஆரம்பகாலப் போராளியான லெப்.செல்லக்கிளி காங்கேசன் சிமெந்து ஆலை வெடிமருந்து அறையை (மகசின்றூம்) தாக்கி, அங்கிருந்த வெடிமருந்தை எடுத்துச் சென்றார். இதன் பின்னரே, மகசின் றூமுக்கு இராணுவக் காவல் போடப்பட்டதுடன், சிறிய இராணுவ முகாமாகவும் மாற்றப்பட்டது. இங்கு சுமார் 15 இராணுவத்தினர் கடமையாற்றினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதல் நடவடிக்கைகளும் வலி.வடக்கிலேயே ஆரம்பிக்கப்பட்டன. தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கும் கட்டுவன் சந்திக்குமிடையே வர்த்தலை விளான் என்ற இடத்தில் வைத்து ஆரியப்பெருமா என்ற இராணுவ அதிகாரியின் வாகனம்மீது புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர். ஆரியப்பெருமா அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இதன் பின்னர் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் சண்டிலிப்பாயிலும் கீரிமலையிலும் கண்மூடித் தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். யாழ்ப்பாணத்தில் இருந்து கீரிமலை நோக்கி வந்துகொண்டிருந்த 788 ஆம் இலக்க மினிபஸ் ஒன்றை சண்டிலிப்பாயில் வழிமறித்த இராணுவத்தினர், பயணிகளை பஸ்ஸிலிருந்து இறக்கி பயணிகள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். இச்சம்பவத்தை நினைவு கூருமுகமாக அந்த இடத்தில் நினைவுக்கல் ஒன்றும் நடப்பட்டது.

இதேதினம் கீரிமலை வலித்தூண்டல் பகுதியிலும் இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித் தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண்மணி ஒருவர் படுகாயமடைந்தார்.

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழீழப் போராட்டம் தீவிரமடைந்தபோது யுத்தம் காரணமாக கூடுதலாக்ப் பாதிக்கப்பட்டது வலிகாமம் வடக்குத்தான். இக்காலப்பகுதியில் வலிகாமம் வடக்கு அரச படைகளின் மும்முனைத் தாக்குதலுக்கு இலக்கானது. ஆரம்பத்தில் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தவில்லை. கடற்படைப் படகில் இருந்தும் இராணுவ ஹெலிகொப்டரிலிருந்துமே தாக்குதல் நடத்தினர். போராளிகளின் வாகனங்களின்மீது இராணுவ ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தும். இரவு வேளைகளிலும் பிரகாசமான காபன் குச்சி வெளிச்சத்துடன் இராணுவ ஹெலிகொப்டர்கள் ரோந்து சுற்றும். நாங்கள் பகலோ இரவோ ஹெலிக்கொப்டர்களைக் கண்டால் மரங்களின்கீழ் பதுங்குவோம்.

ஒருசமயம், ஈ.பி.ஆர்.எல்.எவ்.இனரின் 'எல்வ் ட்ரக்' மீது சேந்தான் குளத்துக்கும் இளவாலைக்கும் இடைப்பட்ட வெளியில் வைத்து இராணுவக் ஹெலியும் கடற்படைப் படகும் ஒரேசமயத்தில் தாக்குதலை மேற்கொண்டன. வாகனத்தில் வந்த அனைவரும் வாகனத்தை விட்டுவிட்டு வாகனத்தின்கீழ போய் பதுங்கிக்கொண்டனர். தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

வலி.வடக்கு இராணுவப் பிரதேசமாக மாறியதற்கு இன்னொரு காரணம் காங்கேசன்துறைக்கும் கீரிமலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் திஸ்ஸ விகாரை என்ற பெயரில் விகாரை ஒன்று இருந்தது. இந்த விகாரைக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவும் காங்கேசன் துறைமுகத்துக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவும் காங்கேசன் சிமெந்து ஆலை வெடிமருந்து அறைக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவும் ஹாபர் வியு ஹோட்டலில் இராணுவம் முகாமிட்டது.

> உயர்பாதுகாப்பு வலயம இன்று சகல ஊடகங்களிலும், சகல அரசியல்வாதிகளாலும் பேசப்படும் விடயம். இதனை ஆங்கிலத்தில் சுருக்கமாக H.S.Z.என அழைக்கிறார்கள். (High Security Zone) என்பதன் சுருககமே H.S.Z. அமெரிக்கா கூட அக்கறை செலுத்தும் அளவுக்கு H.S.Z. பிரச்சினை முக்கியத்துவம் பெற்றுவிட்டது. ஓய்வுபெற்ற இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சதீஷ் நம்பியாரை உயர்பாதுகாப்பு வலயம் சமபந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் கோரிக்கைவிடுத்து வரவழைத்துள்ளது. பாதுகாப்பு வலயத்தினுள் தான் வாழ்ந்த பசுமை நிறைந்த நாள்களை ஒருதரம் பின்நோக்கிப் பார்க்கிறார் கட்டுரையாளர்.
>
> தற்போது தென்மராட்சியிலும் யாழ்நகரிலும் சில இடங்கள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளபோதிலும் வலிகாமம் வடக்கை மையமாகக் கொண்டே இக கட்டுரை வரையப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சகல போராளி இயக்கங்களும் வலி.வடக்கில் முகாமிட்டன. பின்னாளில் பலாலிக்கும் ஹாபர் வியு ஹோட்டலுக்கும் இடையிலான தொடர்பும் போராளிகளால் துண்டிக்கப்பட்டது.


1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு நாள் வானொலி அறிவித்தது. இராணுவ முகாம்களுக்கு அண்மையில் உள்ள மக்கள் அனைவரும் பாடசாலைகளிலும் கோவில்களிலும் போயிருங்கள் என்று அறிவித்தல் ஒலிபரப்பாகி சிறிது நேரத்தில் 'ஒபரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதனையடுத்து வலி. வடக்கு மக்கள் அனைவரும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். பின்னர் இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கை ஆக்கிரமித்திருந்த காலத்தில் சிறிது காலம் வலி.வடக்கு மக்கள தமது இடங்களில் மீளக்குடியமர்ந்தனர்.

மீண்டும் இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகியதும் 16-06-1990 இல் வலி. வடக்கு மக்கள் மறுபடியும் இடம்பெயர்ந்தனர். அன்று இடம்பெயர்ந்தவர்கள் இன்றுவரை வீடு திரும்பவில்லை. இவர்களில் சிலர் வெளிநாடு சென்றுவிட்டனர். வசதியுள்ளவர்கள் சிலர் கொழும்பு வாசிகளாகிவிட்டனர். ஓரளவு வசதியுள்ளவர்கள் வாடகை வீடுகளில் வசித்துவருகின்றனர். இவர்களும் நாட்டில் சமாதானக் காற்று வீசத்தொடங்கியதைத் தொடர்ந்து கஷ்டப்படத்தொடங்கியுள்ளனர். காரணம் இவர்கள் தங்கியிருந்த வீட்டு உரிமையாளர்கள் இவர்களை வீட்டைக் காலி செய்யச்சொல்லிவிட்டு வீடுகளை கூடுதலான வாடகைக்குக் கொடுப்பதிலும் வீடுகளை விற்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். அடிமட்ட மக்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை அகதிகள் என்று சொல்லக்கூடாதென அகதிகள் பற்றிய வரைவிலக்கணத்தில் ஐ.நா. சாசனம குறிப்பிட்டுள்ளது. 2200 குடும்பங்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வசித்து வருகின்றனர்.

வலி.வடக்கு அரசியல், இராணுவ ரீதியில் அரசிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது. காரணம் பலாலி இராணுவமுகாம விமானத்தளம், காங்கேசன்துறைத் துறை முகம் என்பன வலி.வடக்கிலேயே அமைந்துள்ளன. அதேவேளை, தமிழர்களைப் பொறுத்தமட்டில் வலி. வடக்கு தமிழழத்தின் அல்லது தமிழ் மாநிலத்தின் முதுகெலும்பாகக் கருதப்படுகிறது. எனவே, இரு பகுதியினரும் வலிகாமம் வடக்கில் குறியாகவே உள்ளனர். தமிழர் தந்தை எனப்படும் தந்தை செல்வாவின் வீடுகூட பாதுகாப்பு வலயத்தின் உள்ளேயே உள்ளது.

**- ந.பரமேஸ்வரன் -**

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டாலும் பழைய இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்புமா என்பது கேள்விக்குறியே. அல்லது இஸ்ரேலிய பலஸ்தீனர்களின தாயக பூமியான காஸா நிலப்பரப்பை ஆக்கிரமித்துவைத்திருப்பது போல் தமிழீழத்தின் காஸாவாக வலி.வடக்கு மாறிவிடுமா? காலந்தான் பதில் சொல்லவேண்டும். *(முற்றும்)*



# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த குழந்தைப்பிள்ளை கோட (மரம்), சிங்கர் தையல் இயந்திரம், நிலவிரிப்பு (காட்பெற்), குசன் செற்றி, கிடாரம் (15கொத்து) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 182, நாவலா றோட், யாழ்ப்பாணம் (மிருக வைத்திய சாலைக்கு அண்மையில்). (17493)

இல.11, அச்சக வீதி (Press Road)யில் அமைந்துள்ள வீடும், காணியும் (யாழ். ஆயர் இல்லம், புனித பத்திரிசியார் கல்லூரி, பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை ஆகியவற்றிற்கு அருகில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.25, 3ஆம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம். (17503)

கொழும்பில் சொந்தப் பாவனையிலுள்ள அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட WPGS இலக்கத்தை உடைய இரண்டு TATA லேடன் லொறிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777-731695. (17496)

## வீடு விற்பனைக்கு

இல.21/1, கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு (மேல்வீடு கட்ட உகந்தது). தொடர்பு: S.சொல்வேந்தன், இல.77, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (17433)

கொக்குவில், கே.கே.எஸ். வீதியில் (சம்பியன் லேனுக்கு முன்னால்) 6பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. அத்துடன் நாவலர் வீதியில் இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். நேரடி தொடர்பு: T.P. 0777 111312.(சி-27658)

ஏழாலை மேற்கு, கேணியடிக்கு அருகில் 9 பரப்புக் காணியும் நாச்சிமார் கோயிலடிக்கு அருகில் 11/2 பரப்புக காணியும் உடன் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். நேரடி தொடர்பு: T.P.: 0777 -111312. (சி-27660)

## வீடு விலைக்குத் தேவை

வைமன் வீதி, இராசாவின் தோட்டம், கைலாசபிள்ளையார் கோயில் சுற்று வட்டாரத்திற்குள் வீடு விலைகக்குத் தேவை. தரகர் வேண்டாம். நேரடி தொடர்பு: 0777-111312. (சி-27657)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (17369)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 08-05-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும். அத்துடன் சிவப்பு சேவற் குஞ்சுகளும் உண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17256)

## காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, நாச்சிமார் வீதியில் 7 பரப்புக் காணி, நல்ல தண்ணீர் கிணற்றுடன், வீடு கட்டி குறையிலுள்ள நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ஜெயசீலன், கற்பகதரு, தாவடிச் சந்தி. காலை 9.30 மணிக்கு முன்னர் சந்திக்கலாம். (17469)

## அல்சேஷன் விற்பனைக்கு

உடுவில் - லவ்லேன் இடது பக்கம் மூன்றாவது வீட்டில் அல்சேஷன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வசந்தா ஸ்ரீதயாளன், லவ்லேன், உடுவில்(17477)

## வான் தேவை

நாளாந்த அடிப்படையில் கமிசனுக்கு 150 அல்லது 250 ELF றூட் வான் தேவை. தொடர்பு: T.P. 222 5871. (17506)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, லண்டனில் அரசாங்கத் துறையில் பணிபுரியும், உதயச் செவவாயுள்ள, 42 வயது ஆணுக்கும் யாழ்ப்பாணத்தில் ஆசிரியராகத் தொழில் புரியும், செவ்வாயற்ற, 43 வயதுப் பெண்ணுக்கும் தகுந்த மண மக்கள் தேவை. தொடர்பு: வி.இல. 1874, C/o உதயன். (17484)

யாழ்.இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த 1973 மிருகசீரிடம் 4ஆம் பாதம் A/L படித்த கனடா வாசிக்கும், 1969 பரணி 2ஆம் பாதம் உதயச செவ்வாய் கணக்காளருக்கும் (CIMA Part-IV), 1976 உத்திரட்டாதி முதலாம் பாதம் செவ்வாய்க் குற்றமற்ற அரச எழுதுநர் B.Sc.பட்டதாரி பெண்ணுக்கும் (உயரம் 5'8") மணமக்கள் தேவை. தொடர்பு வி.இல. 1875, மே/பா உதயன். (17498)

## மணமகள் தேவை

புலோலி, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1967, திருவோணம், செவ்வாய்க்குற்றமற்ற, சொந்தத்தொழில் ஸ்தாபனம் வைத்திருப்பவருக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: சு.சிவசம்பு, தாவடி தெற்கு, கொக்குவில். (17445)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் பணிபுரியும், விசாக நட்சத்திரம், 1972இல் பிறந்த, லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய, 5அடி உயரமுள்ள மணமகள தேவை. சாதகக்குறிப்பு - புகைப்படம் மற்றும் விவரங்களுடன் நேரில் அல்லது தபால்மூலம் தொடர்பு கொள்ளுங்கள். ப.கிருஷ்ணமூர்த்தி, 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். போன்: 2789. (17431)

## திருமண சேவை

1970, உத்தரட்டாதி, செவ்வாய் பாவமற்ற, கிரகபாவம் உடைய, M.B.B.S. Doctor அரசசேவையில் இருந்து Relese பெற்று U.K. இல் பயிற்சியில் உள்ளவருக்கு (இடதுகால் வலுக்குறைவு) படித்த, கௌரவ குடும்ப மணமகள் தேவை. துரைவிமலா, இலகுதிருமண சேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (17454)

## சோமஸ்கந்தாவில் ஜி.சீ.ஈ. வகுப்புகளில் விவசாய பாடம்

கோப்பாய்,மே4

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் விவசாய பாடத்தைக் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (எ-72)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 06 - 05 - 1930

விண்ணுலகில் 17 - 04 - 1991

அமரர்

### கந்தையா குலசிங்கம்

பன்னீராண்டுகள் ஓடிவிட்டாலும்
தந்தையாய், தாயாய் உடனிருந்து
எமைக் காத்த அந்நாள்கள் - எமக்கு
என்றும் நினைவழியா நாள்களே!

*39/6, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

(17487)

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.*

*இல. 54. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை. (17472)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567
(சி-27206)

## கணக்காளர் தேவை

பில் போடவும், கணக்கு எழுதக்கூடிய முன்னனுபவமும், நற்பண்புமுள்ள கணக்காளர் (ஆண்) தேவை. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவராக இருப்பதோடு, இரத்த உறவினர் அல்லாத இரு வியாபார பிரமுகர்களின் சிபாரிசுடன் உங்கள் விண்ணப்பங்கள் அனைத்தும் சுய கையெழுத்தில் இருத்தல் வேண்டும். திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். வார நாள்களில் மாலை 3.00 - 4.00 மணி வரை நேரில் தொடர்புகொள்ளவும்.

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 2567 (17488)

## விற்பனை விரிவாக்கல் உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்

பதவி : விற்பனை விரிவாக்கல் உத்தியோகத்தர்
கம்பனி : மெக் வூட்ஸ் லிமிட்டெட் விவசாய இரசாயனப்பிரிவு.
தகுதி : விவசாய டிப்ளோமா தகுதி அல்லது அதற்கு சமமான தரம், விவசாய இரசாயன சந்தைப்படுத்தல் அனுபவம், 30-35 வயதுக்குட்பட்டவராயிருத்தல், மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல்.
சம்பளம் : மாதாந்த சம்பளத்துடன் விற்பனைக்கேற்ற கமிஷன்.

இரண்டு மத்தியஸ்தர்களைக் கொண்ட பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை இவ்விளம்பரம் கிடைத்து 10நாள்களுக்குள் அனுப்பவும்.

இயக்குநர்,
மெக்வூட்ஸ் லிமிட்டெட்,
விவசாய இரசாயனப்பிரிவு,
10,ஞானார்த்த பிரதீபய மாவத்தை, கொழும்பு - 8.
(C/27665)

## ஆறாவது வருட நினைவு நாள்



அன்னை அரவணைப்பில் 30 - 01 - 1933

ஆண்டவன் அருள் அணைப்பில் 04 - 05 - 1997

திருமதி

### லில்லி தவமணி நல்லதம்பி

*ஆண்டு ஆறாச்சோ அம்மா என்ற மொழி நாம் மறந்து?*
*ஆண்டு ஆறாச்சோ உன் அன்பு மொழி நாம் கேட்டு?*
*ஆண்டு ஆறாச்சோ உன் அறுசுவை உணவை நாம் மறந்து?*
*அம்மம்மா என்றால் யாரம்மா என அல்லும் பகலும்*
*கேட்டலறும் உன் பேர்த்திக்கும் பேரனுக்கும்*
*ஆறுதல் கூற யாரம்மா அவனியில் உண்டு கூறம்மா?*
*ஆண்டு ஆறென்ன, ஆறாயிரம் தான் சென்றாலும்*
*ஆறுமோ எம் துயர்?*

உங்கள் ஆத்மசாந்திக்காக அல்லும் பகலும் ஜெபிக்கும்:

தகவல்:
J.S. நல்லதம்பி (கணவர்)
அல்வாய்.

அன்புக் குடும்பத்தினர்.

(C/27677)

## நவீன முறையில் எலக்ரோ பிளேட்டிங்

யாழ்.மண்ணில் இப்போது முதற்றடவையாக

**கே.வி.எஸ். எலக்ரோ பிளேட்டிங்**

★ சகல மோட்டார் சைக்கிள்களினதும் உதிரிப்பாகங்கள்
★ வாகனங்களின் உதிரிப்பாகங்கள்
★ கோயில் கொடித்தம்பம் உட்பட
சகல உலோக வீட்டுத் தளபாடங்கள்

அனைத்தும் தரமான முறையில் உத்தரவாதத்துடன் பிளேட்டிங்

நிக்கல் மூலம் செய்து கொள்வதற்கு

**கே.வி.எஸ். ஹாட்வெயர்ஸ்**

இல.123, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-27674)

# தமிழீழத் தொழிலாளர்கள் வியர்வையை மட்டுமல்ல நித்தம் இரத்தத்தையும் சிந்தி உழைத்து நிமிர்ந்தவர்கள்

## அக்கரைப்பற்று மே தின விழாவில் மட்டு. - அம்பாறை புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன் தெரிவிப்பு

கொழும்பு,மே4

சமாதானப் பேச்சுக்களை நாம் குழப்பமாட்டோம்; யுத்தத்திற்கும் போக மாட்டோம். தீய சக்திகள் கட்ட விழ்த்து விட்டுள்ள வதந்திகளை நம்பி யாரும் அச்சம்கொள்ளவேண்டாம். எமது தலைவரை யாரும் ஏமாற்ற முடியாது; நாமும ஏமாற மாட்டோம்.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட இராணுவ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ரமணன்.

அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். விடுதலைப் புலிகள் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்து இந்த மேதின விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் மேதின ஊர்வலங்கள், ஊர்திகள் சகிதம் புறப்பட்டு அவை தர்மசங்கரி மைதானத்தை வந்தடைந்தன. விழாவில் பெருந்திரளான தொழிலாளர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். ஆலையடிவேம்பு கோட்டக்கல்வி அதிகாரி வீகுணாளன் தலைமையில் நடைபெற்ற மேதினப் பொதுக்கூட்டத்தில் ரமணன் மேலும் கூறியதாவது:-

இன்று மறக்கமுடியாத ஒரு நாள்.

எமது தேசத்தின் பாரம்பரிய மாவட்டமான அம்பாறை மாவட்டத்தில் வாழும் எமது மக்களை இந்த மாவட்டத்தில் இருந்து விரட்டியடிக்க வேண்டும் என்ற நோக்கோடு பல ஆக கிரமிப்புக்கள், பல கொடூரங்கள் நடைபெற்றிருக்கின்றன.

அவற்றில் ஓர் அங்கம் இந்தச் சமாதான சூழ்நிலையிலும் காஞ்சிரங்குடாவில் இடம்பெற்ற சம்பவம்.

அந்த அடக்குமுறைக்குள் இருநத எமது மக்கள் இந்தச் சூழ்நிலையிலேயே அணியணியாகத் திரண்டுவந்து குரல்களை உயர்த்தியெழுப்பி இந்த ஆக்ரோசத்தை - எமது போராட்டத்தின் தன்மையை - விளங்கப்படுத்தியிருக்கிறார்கள்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் சக்தியாக தொழிலாளர் வர்க்கம் இருக்கின்றது. வியர்வை சிந்துகின்றது.

ஆனால், எமது தமிழீழத்தின் தொழிலாளர்கள் மிக வேறுபட்டவர்கள். மிக உழைத்தவர்கள். வியர்வையை மட்டும் அல்ல இரத்தத்தையும் சிந்தி உழைத்தவர்கள். இங்கு காட்டுக்குப்போனவர் திரும்பிவரவில்லை. மீன்பிடிக்கச் சென்றவர்கள் திரும்பி வரவில்லை. அருவி வெட்டச்சென்றவர்கள் திரும்பிவரவில்லை.

இப்படிப்பட்ட கொடூரங்களுக்கு மத்தியிலும் எமது தமிழீழத்தின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு வியர்வை மட்டுமன்றி இரத்தமும் சிந்தியவர்கள் எமது தொழிலாளர் வர்க்கத்தினர்.

உலகத்தில் நடக்கும் யுத்தங்களில் மிகக் கொடூரமான ஓர் ஆயுதமான வல்லாதிக்கம் பேரினவாதிகளால் மக்கள்மீது திணிக்கப்படுகின்றது.

தமிழீழப் போராட்டம் ஆரம்பித்த போது முதல்முறையாக இலங்கை அரசு எங்கள் மக்கள் மீது ஏவிய கொடூரமான ஆயுதம் பொருளாதாரத் தடை.

எமது தலைவரின் தீர்க்கமான செயற்பாடு, முழு நம்பிக்கை உடையதுமான திட்டங்கள், அத் திட்டங்கள் மீதான எமது போராளிகளினதும் எமது மக்களினதும் அர்ப்பணிப்பு ஆகியவை பொருளாதாரத் தடையை உடைத்தெறிந்தன. அதன் மூலம் எமது மக்கள் போராட்டத்துடன் பொருளாதாரத்தையும் வளர்த்துக்கொண்டு செல்லக்கூடியதாக இருந்தது.

எம்மீது பொருளாதாரத் தடைவிதித்த இலங்கை அரசு, மாறாக தனது பொருளாதார வீழ்ச்சியால் திண்டாடியது. அதுவே எம்முடன் இன்று பேச்சுக்கு வரவேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

இன்றைய சமாதானச் சூழலில் எமது தமிழீழத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தி முன்னேறவேண்டும். தனித்துவமான பொருளாதாரத்தை எமக்கென வளர்க்கவேண்டும்.

எல்லோரும் உழைக்கும்பொழுது தான் எமது தமிழீழம் ஓங்கிவளரும்.

நாங்கள் அரசிடம் சென்று எம்மை மன்னித்துவிடுங்கள், யுத்தத்தைப் பிழையான வழியில் செய்துவிட்டோம், கொழும்பில் பாதுகாப்புத் தாருங்கள், நாடாளுமன்றத்தில் ஆசனம் தாருங்கள் என்றெல்லாம் கேட்கவில்லை.

நாங்கள் சலுகைகளுக்காக சமாதானப் பேச்சுக்குச் செல்லவில்லை.

எமது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான் பேச்சுக்களின் முக்கியநோக்கமாகும்.

இந்தப் பேச்சு தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம், இவ்வளவு காலமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி, நடத்தப்பட்ட பேச்சுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை இன்னும் அரசு செயற்படுத்தாமையே ஆகும்.

இவற்றை நிறைவேற்ற கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதே தவிர, யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கம் எங்களுக்கில்லை.

சமாதானத்தின்மூலம் உரிமைகளைப் பெறவேண்டும் என்பதற்காகப் பல அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறோம்.

சர்வதேச ரீதியாக நாம் இந்தப் பேச்சுக்களை இன்று நடத்திக்கொண்டு இருக்கின்றோம். சர்வதேச சமூகம் இப்பேச்சுக்களை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு இருக்கிறது.

எனவே, எமது ஒற்றுமைக்காக - எமது மக்களின் உரிமைக்காக - ஒரு குடையின்கீழ் நின்று குரல் எழுப்பும்போதுதான் சமாதானத்தையும் அதன்மூலம் எமது உரிமையையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை இது இரு சமூகங்களான தமிழர்களும், முஸ்லிம்களும் மிகநெருக்கமாக வாழும் மாவட்டமாகும். எனவே, முஸலிம் - தமிழ் உறவுகளை வளர்க்க வேண்டும்.

இதற்குப் பல செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமென பத்திரிகைகளில் அறிக்கைகளைப் பார்க்கின்றோம். மேடையில் பேசுகின்றோம். ஆனால், இதுவிடயத்தை ஆழமாக உற்றுநோக்கவேண்டியுள்ளது.

இந்திய இராணுவம் தமிழீழதனதை ஆக்கிரமித்திருந்தபோது - நாம் அம்பாறை மாவட்டத்திற்கு வரும்பொழுது - மருதமுனை, அக்கரைப்பற்று உட்பட மற்றும் சில பிரதேசங்களில் முஸ்லிம் மககள் எமக்கு ஆதரவளித்து எம்மைக் காப்பாற்றிய சம்பவங்களை நாம் மறந்துவிடவில்லை.

இப்படியெல்லாம் இருந்த தமிழ், முஸ்லிம் உறவு ஏன் பிரிக்கப்பட்டது? சில சக்திகளின் ஊடுருவல் காரணமாக இந்த உறவுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஊடுருவல்காரர்களின் சூழச்சியால், எம்மாலும் தவிர்க்கப்பட முடியாத சில தவறுகள் நடந்திருக்கின்றன. அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், இனிமேலாவது இந்த நிலையைப் பேணுவதாக இருந்தால் தலைமைத்துவங்கள் சரியாக இருக்கவேண்டும்.

சில சக்திகளின் இத்தகைய ஊடுருவல்கள் உள்ளதைப் புரிந்துகொள்ளாத வரைக்கும் தமிழ் - முஸ்லிம் உறவு என்பது சிக்கலான பாதையில்தான் போய்க்கொண்டு இருக்கும். எங்களுடைய தலைமைத்துவம் சமூக உணர்வுகளை மதிக்கின்றது; சமூக நலன்களைப் பேணுகின்றது.

இன்று பேச்சு நடந்துகொண்டு இருக்கின்றது. உண்மையில் அடிப்படைப் பிரச்சினை எந்தவகையில் தீர்க்கப்படுகின்றதோ அந்தப் பிரச்சினைத் தீர்வின் பின்பு முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு, அவர்களுடைய சமூக உணர்வுகளும் மதிக்கப்பட்டு, அவர்களுக்குரிய உரிமையும் வழங்கப்படும் என்பதை நான் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

எனவே, நாம் எல்லோரும் இணைந்து தமிழீழத்தில் ஒற்றுமையாக வாழவேண்டும். இதற்கு எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

தீய சக்திகளின் ஊடுருவலின் காரணமாக பல நாடுகள் அல்லோல கல்லோலப்படுகின்றன. சில ஏகாதிபத்திய நாடுகளில் ஊடுருவலால் ஆப்கானிஸ்தானில் இன்றும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டவண்ணம் உள்ளன. ஈராக்கிலும் இதேநிலைதான்.

எந்த ஏகாதிபத்தியம் ஒரு சமூகத்துக்குள் ஊடுருவுகின்றதோ அந்தச் சமூகம் பல பிரச்சினைகளைச் சந்திக்கும் என்பதை வரலாறுகள் சொல்லுகின்றன. இன்று எமது தலைமைத்துவத்தை எவராலும் அசைக்க முடியாது; எமது தலைவரை எவராலும் ஏமாற்றமுடியாது. எமது தலைவரை இன்றுசிலர் பயங்கரவாதி என்று கூறுவதற்கும் காரணம் அதுதான்.

எல்லா நாடுகளும் எமது தலைவரை வாங்குவதற்காக பல சந்தர்ப்பங்களை ஊட்டிப் பார்த்தார்கள். தலைவர் சொன்னார் "என்னுடைய கதையைக் கேட்கட்டும். ஆனால், என்னுடைய மக்களை மறக்கமாட்டேன், எனது தேசத்தை மறக்கமாட்டேன். எனவே, என்னுடைய தலைமைத்துவம் எமது மக்களுக்காகவே. என்னை யாரும் விலைகொடுத்து வாங்கமுடியாது" - என்று.

அதனால்தான், இன்றும் நிலையான - எந்த ஏகாதிபத்தியத்தாலும் அசைக்கமுடியாத - தலைமைத்துவமாக இருக்கின்றது.

"மக்கள் ஒத்துழைப்போடு சமாதானத்தை வென்றெடுக்க நாம் பாடுபடுவோம்" - இவ்வாறு அவர் கூறினார்.

அ.சந்திரநேரு எம்.பி., புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாவா, நிர்வாகப் பொறுப்பாளர் நிவராஜ், கல்வித்துறைப் பொறுப்பாளர் மகேந்திரவர்மன் உட்படப் பல பரமுகர்கள் விழாவில் கலந்துகொண்டனர். (ஐ)

## குருகுலத்தில் 30மாணவருக்கு பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,மே4

இந்து கலாசார அமைச்சின் குருகுலத்தில் சிவாச்சாரியர்களுக்கான வகுப்புகள் தினமும் காலை முதல் இரவு வரையும் நடைபெற்று வருகின்றன.

இநத வகுப்புகளில் முப்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி வருகின்றனர். அத்துடன் கணனி, ஆங்கிலம் மற்றும் சோதிட வகுப்புகளும் இங்கு நடைபெற்று வருகின்றன. இதைவிட சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் வயது வேறுபாடின்றி சகல அந்தணர்களுக்கும் பல்துறைகளிலும் விரிவுரைகள், பயிற்சிகள் வழங்கிவருகிறார். (ஐ-10)

## முள்ளியான் உபதபாலகம் மீண்டும் இயங்கும்

வடமராட்சி கிழக்கு,மே4

முள்ளியான் உப தபால் நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2000ஆம் ஆண்டு தொடக்கம் இத்தபால் நிலையம் இயங்காமல் இருந்து வந்துள்ளது.

முன்னர் இநத உபதபால் நிலையத்தில் கடமையாற்றிய உபதபாலதிபர், முல்லைத்தீவு தபால் நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்டதை அடுத்து, முள்ளியான் உப தபால் நிலையத்தை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(எ-182)

## காணாமற்போனோர் சங்க உறுப்பினருக்கு!

யாழ்ப்பாணம்,மே4

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கையிலுள்ள அன்னையர் முன்னணித் தலைவி செ.கமலாம்பிகையின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

பிரதமருடனான சந்திப்புக் குறிதது இதில் ஆராயப்படவுள்ளதால் சங்க உறுப்பினர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-9)

# காலிமுதல் காங்கேசன்துறை வரை வாழும் தமிழ் மக்களை ஒன்றிணைக்க வேண்டும்

## உரிமையை அதன் மூலம் வெல்லலாம் என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்

ஹட்டன்,மே4

இலங்கையில் சமாதானச் சூழலுக்கான காலம் இப்போது கனிந்துள்ளது. இச் சந்தர்ப்பத்தில் காலி முதல் காங்கேசன்துறை வரை இலங்கையின் சகல பகுதிகளிலும் பரந்து வாழும் தமிழ் மக்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வருவதன்மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். எனவேதான், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களை புலிகள் தற்காலிகமாக இடைநிறுத்திய நேரத்தில் உடனடியாக வன்னிக்குச் சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினேன். பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என வலியுறுத்தினேன்.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ.சந்திரசேகரன் ஹட்டனில் இடம்பெற்ற மேதின விழாவில் சமாதானப் புறாவைப் பறக்க விட்டு பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

மலையக மக்கள் முன்னணி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து என்னைப் புலிகளுக்கு ஆதரவானவன் என்று கூறுகிறார்கள். நான் தமிழ் மக்களின் ஆதரவாளன் என்பதை அவர்கள் சிந்திக்க மறந்து விட்டார்கள்.

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு அரசியல் காரணம் உண்டு. இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தினால், நாட்டைப் பிரித்துக் கொடுத்து விடப் போவதாக ஜே.வி.பியும், சிஹல உறுமயவும் கூறுகின்றன. நானும் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் சிங்கள மக்களிடமும் தமிழ் மக்களிடமும் போய்ப் பேசத் தயாராக இருக்கிறோம். இனவாதம் பேசுகின்றவர்கள் எம்மைப்போல் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார்களா? - என்றார். (ஐ)

# ஆசிரியர்கள் சம்பளம் ஆகக்குறைந்தது 10,000 ரூபாவாக அதிகரிக்கப்படவேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மேதினத் தீர்மானம்

இலங்கை ஆசிரியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படல் வேண்டும்.

- இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மே தினக் கூட்டத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ ஆசிரியர் பதவி உயர்வுகள் கடந்த 3 வருடங்களாக நடைமுறைப் படுத்தப்படவில்லை. பதவி உயர்வு புள்ளி அடிப்படையில் விரைவாக நடைபெற அரசை வலியுறுத்துகின்றோம்.

★நாடெங்கும் 10 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் காணப்படுகின்றன. இது கல்விக்கான சமவாய்ப்பைப் வெகுவாகப் பாதிக்கின்றது. இவ்வருட முடிவுக்குள் குறைந்தது 5 ஆயிரம் ஆசிரியர் நியமனங்களையாவது வழங்க வேண்டும்.

★சமாதானப் பேச்சுக்களில் அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதுடன் உள்ளக சுயாட்சி மூலம் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு அரசைக் கோருகின்றது.

★ வாழ்க்கைச்செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது. ஐ.தே.க.அரசு பதவிக்கு வரமுன்னர் கூறிய 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும்.

★கல்வி நிர்வாக சேவை - தரம் 2, 3 இற்கு பதவி உயர்வு என்பனவற்றில் தமிழ்பேசும் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்குக் காட்டப்படும் இனரீதியான பாரபட்சம் நீக்கப்பட வேண்டும். இன விகிதாசார பதவி உயர்வுகள் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கென நடத்தப்பட்ட இரு பாட்சை முடிவுகளும் இதுவரை வெளியிடப்படவில்லை. இவை உடனடியாக வெளியிடப்பட்டு உரிய பதவி உயர்வுகள் வழங்கப்படவேண்டும்.

★வடக்கு - கிழக்கிற்கு வெளியில் தமிழ் பாடசாலைகளுக்கு சிங்கள அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். இந்த நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழ் பாடசாலைகளுக்குத் தமிழர்களும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம் அதிபர், ஆசிரியர்களும் நியமிக்கப்படவேண்டும்.

★ ஆசிரியர் தரம் கணிப்பு செயன்முறையில் ஆசிரியர்கள், அதிபர்களால் பழிவாங்கப்படுவதை சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. அதே வேளை, பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுடன் சங்கம் இறுதிவரை உறுதுணையாக இருந்து நீதி கிடைக்கப் போராடும் என உறுதியளிக்கிறது - என்பனவாகும். (ஐ)

## நவீன வசதிகளுடன் நிறுவப்படவுள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரி கிராமத்துக்கு அறக்கட்டளை நிதியம் அமைப்பு

யாழ்.மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள புற்றுநோய் வைத்தியசாலைக் கிராமத்தின் நிர்மாண வேலைகளுக்கென அறக்கட்டளை நிதியம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

மேற்படி கிராமத்தில் நிர்மாணம் தொடர்பான கலந்துரையாடல் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன் போது அறக்கட்டளை நிதியம் உருவாக்கப்பட்டது.

ஐந்து பேர் கொண்டதாக அமைகப்பட்டுள்ள இந்த நிதியத்தில் பேராசிரியர் வி.குணானந்தம், டாக்டர் வை. தியாகராஜா, டாக்டர் கே.மயிலேறும்பெருமாள், இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் சி.நடராசலிங்கம், யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அத்துடன்,10பேர் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றும் இந்தக் கலந்துரையாடலில் தெரிவுசெய்யப் பட்டுள்ளது. இதில் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம், டாக்டர் எஸ்.எக்ஸ். குலநாயகம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் ஏ.நல்லதம்பி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் வி.ஸ்ரீசக்திவேல், எஸ்.விக்னேஸ்வரன், வி.ஜி.தங்கவேல், ஜி.ஜோசப், திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன், திருமதி நவநீதம் ஜெகதீசன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.(எ-10-173)

## முகாமையாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு நிர்வாகத் திறமையுடைய முகாமையாளர் தேவை. கணக்கியல், ஆங்கில அறிவுடையோராக இருத்தல் நன்று. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், தொழில் துறை அனுபவங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 1871
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.

(C/27681)


## கண்ணீர் அஞ்சலி

கரம்பன் கிழக்கு J/52 பிரிவில் சமுர்த்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றி அகாலமரணமடைந்த

**திருமதி திலகராஜா ஜெகத்ஜனனி**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

*கரம்பன் கிழக்கு.* (17523) கிராம அலுவலரும் மக்களும்.

## மருதங்கேணியில் நடமாடும் மருத்துவ சேவைக்கு ஏற்பாடு

மருதங்கேணிப் பிரதேசத்தில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை 3 கிராமங்களில் நடமாடும் வைத்திய சேவையினை நடத்த முன்வந்துள்ளது.

ஒவ்வோர் இடத்திலும் வாரத்தில் மூன்று நாள்களுக்கு இச்சேவை நடத்தப்படவுள்ளது. இச்சேவைக்கென மருத்துவகூடங்களும் அமைக்கப்படவுள்ளன. (எ-182)

## கைதடி பிணக்குக் குறித்து கைதானோர் பிணையில்!

கைதடி கிழக்குப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பிணக்கு சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட 12 பேரும் தலா 3 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் சரீரப்பிணையிலும் சாவகச்சேரி நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (எ-75)

## கால்நடைக் கழிவுகளால் துர்நாற்றம்

கோண்டாவில் ஆணித் தொழிலக வளவில் அண்மைக்காலமாக கால்நடைகளின் கழிவுகள் கொட்டப்படுவதால் அதிலிருந்து எழும் துர்நாற்றத்தினை சகிக்க முடியவில்லை என அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

தொழிற்சாலை இயங்காததால் இந்தக் காணியில் கால்நடைகளின் கழிவுகள் இரவு வேளைகளில் வீசப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் பலன் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-117)


## தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்வி கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலை தாதிகள் பயிற்சிப் பாடசாலை விரிவுரை மண்டபம் கட்டுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை யாழ்.வைத்தியசாலையில் 10.05.2003வரை மீளளிக்கப்படாத ரூபா 100/- கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 17.05.2003ஆம் திகதியன்று காலை 10.00 மணியாகும்.

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்,
பணிப்பாளர்.
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (C/27690)



## NORTH EAST TECHNOLOGIES (NET)

### யாழ்.நகரில் உதயம்!

**NET CAFE** (24 மணிநேர இன்ரநெற் சேவை) மணித்தியாலத்துக்கு ரூபா 60 மட்டுமே! அங்கத்தவர்களுக்கு சலுகைக் கட்டணங்கள். (விண்ணப்பப் படிவங்களை நிரப்பி அங்கத்துவ அட்டையை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்)
**VEDIO CONFERENCE, NET MEETING** மூலம் உலகெங்கிலும் உள்ள உறவினர்களைப் பரஸ்பரம் பார்த்துக்கொண்டே பேச!
நிமிடம் ஒன்றுக்கு ரூபா 10 மட்டுமே! மற்றும் திருமண வைபவங்களை யாழ்.நகரிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஒரே நேரத்தில் கண்டுகளிக்க (அவர்களிடமும் கணனியும் Web camera, Inter Net connection இருத்தல் வேண்டும்)

தொடர்பு :
**0777 - 708497 (HOTLINE)**

NET Working, LAN, WAN, SOHO, Net 2 Phone சகலவிதமான கணனிகளுக்கிடையேயான வலைப்பின்னல் சம்பந்தப்பட்ட ஆலோசனைகள், சேவைகள தரமான Designகளிற்கும் நாடுங்கள்.

சகலவித P-I, II, III, IV கணனிகள் விற்பனை, உதிரிப்பாகங்கள் தரமான திருத்த வேலைகளிற்கும்,
Mobile Phones, Nohia, Motorola, Ericsson, Sony Ericsson போன்ற சகல செலூலர் தொலைபேசிகள் விற்பனை, உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள் - Mobile Phone unlocking சேவைகள (lock உடைத்தல்) போன்றவற்றிற்கும்
தொடர்பு கொள்ளுங்கள்.

வேலை வாய்ப்புக்கள்:- மேற்படி தொழில்நுட்பங்களில் ஆர்வம், அனுபவம் மிக்கவர்கள் தங்கள் சுயவிவரங்களை 09.05.2003 இற்குள் அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**பொது முகாமையாளர்,**
**வட கிழக்குத் தொழில்நுட்பம்**
34, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-27689)


## அறிவித்தல்

### தொண்டமானாறு வெளிக்கள நிலையம்

தொண்டமானாறு வெளிக்கள நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் மிகவிரைவில் நடைபெற இருப்பதால் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் தமது பிரேரணைகளை 19.05.2003ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும்.

பிரேரணைகள் அனுப்பவேண்டிய முகவரி

திரு. கே.எஸ்.குகதாசன்,
70/10, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

கே.எஸ்.குகதாசன் தலைவர் (C/27691) பொ.சிவானந்தராஜா செயலாளர்

## திருக்குறள் முற்றோதலுக்கான தங்கப்பதக்கம்

1330 திருக்குறள்களையும் பிழையின்றி மனனம் செய்து ஓதுபவர்களுக்கு

**17வது திருவள்ளுவர் விழாவில்**

தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படும்

இடம் : கருணையம்பதி சனசமூகநிலையம் குஞ்சர்கடை
காலம்: 15.05.2003 வியாழக்கிழமை

இத்தகு திறமையுள்ளோர் கலாநிதி S. சிவலிங்கராஜா
(தமிழ்த்துறை யாழ்பல்கலைக்கழகம்) தொடர்புகொள்ளவும்.
இறுதித்திகதி 10.05.2003

குறிப்பு: திருக்குறள் முற்றோதலுக்கான தங்கப்பதக்கம் வருடாவருடம் வழங்கப்படும்

அனுசரணை:
பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

கருணையம்பதி இளைஞர் முற்றோதலுக்கான கழகம்
கருணையம்பதி.

## கண்ணீர் அஞ்சலி



**தவில் வித்துவான் சுப்பிரமணியம் நடராசா**

ஓசையின்று ஓய்ந்ததுவோ? ஓலமிட்டு
அழுகின்றோம். காலமெல்லாம் எங்களை
ஆசையுடன் அரவணைத்த அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் கரங்களின்
நாத ஒலி எம் நெஞ்சை விட்டு மறையவே மறையாது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*முருகமூர்த்தி கோயிலடி,*
*நெல்லியடி.* (17515) உறவினர்களும் குடும்ப நண்பர்களும்.

## இதய அஞ்சலி



சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான பரிபாலன சபை
பொருளாளர்

**அமரர்**
**த.ஸ்ரீவரதலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு பேரதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவர் எமது ஆலய வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்த ஒரு சிறந்த சமூக சேவையாளர் ஆவார். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்களுக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஐயனாரைப் பிரார்த்திக்கின்றோம்.

- சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானம்.

(17518)

## மரண அறிவித்தல்

தவில் வித்துவான்

**சுப்பிரமணியம் நடராசா**

நெல்லியடி, முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த தவில் வித்துவான் சுப்பிரமணியம் நடராசா நேற்று (03.05.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தெய்வானையின் அன்புக் கணவரும் உமாகேஸ்வரி, ராஜகுமார், கிருஷ்ணமூர்த்தி, நந்தகுமார், துஷ்யந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் விநோதன், சரிதா, சுபாசினி, சிவரஞ்சினி ஆகியோரின் அருமை மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுதுமலை அம்மன் கோயிலடியில் உள்ள அவரது மூத்தமகளின் இல்லத்தில் இன்று (04.05.2003) ஞாயிறு காலை 10.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.நந்தகுமார்(மகன்)
(தவில்)

*கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (17514)

| | | | |
|---|---|---|---|
| வெ. | சூ. ▲ புதன் | சனி ராகு சந். | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| செ. | | | |
| | கேது | | |

# இந்த வார இராசி பலன்

மகாதேவா ஜோதிடம்

## 04-05-2003 - 10-05-2003

### மாற்றம்

4.05.2003 ரோகிணி, இடபம் ராசியில் சந்திரன் நிற்கும். அரசியல் சமாதானப் பேச்சுத் தொடரும். தென்பகுதி அரசியல்வாதிகள் பேதப்படுவர். சம்பள உயர்வுப் போராட்டங்கள், அகதிப் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்கள் ஏற்படும். இந்திய அரசியலில் தேர்தல் பிரசார வேலைகள் மறைமுக ஆரம்பம். வடக்கே சில அசம்பாவிதங்கள். ஈராக் அழிவு தொடரும். மேற்கு நாடுகளிடையே கருத்து வேற்றுமை தொடரும். இந்துசமுத்திர, பசுபிக் சமுத்திர பிராந்திய நாடுகளில் இயற்கை அழிவுகள் ஏற்படும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

பணக்காரனாக இருப்பதுவும் ஆபத்து. பரதேசியாக இருப்பதுவும் மிகக் கஷ்டம். எல்லாம் விதியின் விளையாட்டு. தொழில் ஸ்தானத்தில் பொருளால் பிரச்சினைகள் வரும். காணி பூமி சேரும் பலன் உண்டு. யாத்திரை செயய ஒரு யோசனை. சகோதரர்களுக்கு இடமாற்றம். சகோதரங்களுடன் காணி பூமிப் பிரச்சினைகள் வரும். உஷ்ண வாய்வுப் பீடைகள் கொடுக்கும். எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம். மாணவர்கள் நன்மை அடைவார்கள். சந்தை வியாபாரம், தொழில்நுட்பத்துறை, கோயில் வேலை செய்பவர்களுக்கு ஆதாயங்கள் பெருகும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### இடபம்

தனித்துவ முயற்சியால் உயர்ந்து, ஒன்றுபட்ட வாழ்வு வாழ்ந்து சிலர் புகழ் அடைவது புதுமையல்ல. ஏழரைச் சனி கலக்கத்தைக் கொடுக்கும். பணக்கஷ்டங்கள் வரும். பலருக்கு உதவிகள் செய்வீர்கள். பலரும் உங்களுக்கு உதவுவார்கள். இனஜனங்கள் உதவி, புகழ் பரவும். சினிமா, ரீ.வி., வீடியோ செலவுகள் அதிகரிக்கும். மாணவாகளுக்கு ஆசிரியர்களின் ஆலோசனை, உதவிகள் கிடைக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். எதிர்ப்பாலாரின் உதவி கிடைக்கும். வைத்தியத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் : திங்கள், புதன்.*

### மிதுனம்

இழப்புகள் வரும் பொழுதுதான் சிலருக்கு வேகமான செயற்பாடுகள் வருகின்றன. பொருள் வரவு சுமாராகும். அயலவர்களுடன் நிதானம், தொழிலில் நன்மை, மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பழைய பாக்கிகள் வரும். பொருளொன்று களவு போக இடம் உண்டு. எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் ஏற்படும். இடமாற்றங்களைக் கண்டபடி செய்ய வேண்டாம். மாணவர்களுக்கு மாற்றங்கள் கிடைக்கும். குருத்தொழில், தரகு வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன்.*

### கடகம்

மனித முயற்சிகளுக்கு மேல் ஒன்று ஆளுமைப்படுத்தப்படுகின்றது. அது தெய்வீக சக்தியால் வரமபு போடப்படுவதை எத்தனை பேர் உணருகின்றனர். பணவரவு, தொழில்ஸ்தானத்தில் புதிய நடைமுறை வழிகாட்டும். வீடு, வாகன வசதிகள் கிட்டும். காச நோய், காய்ச்சல், சளி கொடுக்கும். வைத்தியம் செய்யச் சுகம் தரும். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படும். பிரயாண வசதிகள் ஏற்படலாம். இனஜனங்கள் உதவி செய்து தருவர். வியாபாரிகள், அரசியல்துறையினர், தரகு தொழில் செய்பவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வியாழன்.*

### சிங்கம்

நிம்மதி அற்ற உலகில், நாம்தான் போராடி நிம்மதியைத் தேடிக்கொள்ளல் வேண்டும். தொழில்ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு இருக்கும். ஆடை, ஆபரண வரவ[illegible]நிக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை வரும். அரச[illegible]லது தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவுவார்கள். சாப்பாட்டில் அளவுடன் இருக்கவும். அல்லது உடல் நிலை பாதிப்பு வரும். காலில் வருத்தம். காய்ச்சல், சளி வர இடம் உண்டு. போக்குவரத்துத்துறை, வியாபாரம், தோட்டத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். இடமாற்றம் சிலருக்கு வரலாம். அதனால் வீண் அலைச்சல் வரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### கன்னி

உலகம் உன்னைப் பார்த்து சிரித்தால் - உலகத்தைப் பார்த்து நீ சிரிக்கும் நிலையை உருவாக்க முயற்சி செய்தால் என்ன? வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க மனிதவலு காணாதா? பொருள் வரவு சுமாராகும். வடு, வாகனயோகம் வரும். சகோதரங்களுடன் கருத்து வேற்றுமை ஏறபடும். போக்குவரத்துத் துறையினர், குருத்துறையினர் நன்மை அடைவர். மாணவர்களுக்கு எதிர்ப்புகள் வரும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். நகைத்துறையினர், பத்திரிகை, சங்கீதத்துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### துலாம்

உடல் நிலைத் தாக்கம் சொல்லிக்கொண்டு வருவதல்ல. ஆயினும் நாம்தான் தாங்கிக் கொள்ளல்வேண்டும். அதேபோன்று தொழில்ஸ்தானத்திலும் பொறுமை வேண்டும். பொருள் வரவு, இனஜன ஆதரவு, ஓடியாடித்திரிந்து நற்காரியங்கள் செய்வீர்கள். பேச்சுகளில் பலன் அடைவீர்கள். வீடு, வாகன யோகம் உண்டு. சகோதரங்களுடன் அபிப்பிராய பேதம், செல்வாக்கு வளரும். தந்தையாருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். வாய்வுத் தொல்லை வரும். சந்தை வியாபாரிகள், பாதுகாப்புத்துறை, சட்டத்துறையினர் அதிக இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன்.*

### விருச்சிகம்

அட்டமத்துச் சனி எட்டிப் பார்க்கப் போகின்றது. விதிக்கிரகமான சனியை எதிர்கொள்ள வேண்டிவரும் காலமாகும். மனம் பல விஷயங்களால் பதற்றமடையும். தொழில்ஸ்தானத்தில் தேவையில்லாத பொறுப்பு சுமத்தப்பட்டு வீண் பழி கேட்பீர்கள். புதிய பணவரவு, புதிய திட்டங்களை உருவாக இடம் உண்டு. காணி பூமி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படும். உறவினர்கள் குற்றம் சுமத்துவர். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். வியாபாரிகள், மருந்து, சந்தை, தோட்டம் போன்ற துறையினர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன்.*

### தனுசு

ஒருவருடைய பலவீனத்தைச் சலர் தமக்குச் சாதகப்படுத்திக் கொள்கின்றார்கள். வாக்குக் கலகம், பொருள் வரவு, வீட்டுச் செலவு, புத்திரர்கள், சகோதரங்களுக்கு பாதிப்பு கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். புதிய நண்பர்களால் பல நன்மைகள் கிடைக்கும். பொருள் தவறலாம். கண், கால் வருத்தங்கள் வர இடம் உண்டு. குருத்துறை, சட்டத்துறையினர் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன், வியாழன்.*

### மகரம்

விடாது முயற்சி ஒருவருக்கு வெற்றியைத் தரும். உதயத்தில் இரத்தகாரனான செவ்வாய் நிற்பதனால் அடிக்கடி கோபம், காணி பூமி பிரச்சினை, வீட்டில் கலகம், சகோதரங்களுடன் அபிப்பிராய பேதம் கொடுக்கும். மறைமுக எதிரிகளால் தொல்லை, நஷ்டங்கள் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய்கள் கொடுக்கும். பிரயாணங்கள் ஏற்படும். சளித் தொல்லை, கால் வருத்தம் கொடுக்கும். மருந்துத்துறை, ரீ.வி., வீடியோ, சங்கீதத்துறை, தொழில்நுட்பம், தோட்டத்துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### கும்பம்

ஓடிஓடி கால்கள் சோர்ந்துவிட்ட நிலை சிலருக்கு. ஆனால் அனுபவசாலிகளின் சேவை நமக்குத் தேவையாகும். கடும் உழைப்பு உங்களுக்கு. புதிய திட்டங்கள் உருவாகும். படிப்படியான பணவரவுகள், புதியவர் வரவு, திட்டமிட்ட செயற்பாடுகள், பொருள் களவு போகலாம். கால் வருத்தம், தலையிடி, காய்ச்சல் வரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். ஆயுதங்களால் காயங்கள் சிலருக்கு வர இடமுண்டு. கவனம். ஓய்வு முக்கியம். குருத்தொழில், சட்டத்துறையினர்கள், மருந்து, கடல்துறையினர்கள் நன்மை அடைவர். மாணவர்களுக்கு சித்திகள் வரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### மீனம்

எமது சிந்தனை, எமது தொழில்துறை, பொருள், சமுதாய வட்டத்தினுள் வட்டமிடும். அதற்கு மேல் சிந்திப்பவர்கள் ஒருசிலர்தான். எனவே, நீங்களும் பொருளில் கவனமாக இருந்து நிறைவுபெறுங்கள். வெளிநாட்டுத் தொடர்பு, பொருள் வரவு, இடமாற்றங்கள் கொடுக்கும். ஏமாற்றங்கள் மேலிடும். எதிர்ப்பாலார் உதவிகள் செய்வார்கள். பொருளால் குறைகுற்றங்கள் வரும். சளி, வாய்வு கொடுக்கும். மாணவர்கள் நன்மை அடைவார்கள். கடல்துறை, வியாபாரிகள், சந்தை வியாபாரிகள், ஹோட்டல்காரர்கள், சங்கீதத்துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

# முள்ளியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு விரைவில் தற்காலிக வதிவிடங்கள்

## நல்லூர் பிரதேச செயலர் தகவல்

யாழ்ப்பாணம்,மே4

அரியாலை முள்ளிப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 118 குடும்பங்களுகக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் அனுசரணையுடன் விரைவில் தற்காலிக வதிவிடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்.

நல்லூர் பிரதேச செயலர் வி.வி. முருகையா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரியாலைப் பகுதியில் மீளக் குடியமர்ந்த குடும்பத்தினர் பலரும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அத்துடன், அவர்கள் பல்வேறு வசதியீனங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, இத்தகைய நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அரியாலையின் முள்ளி, சாலியப்பிட்டி பகுதிகளில் 118 குடும்பங்களுக்கு தனித்தனியாக தற்காலிக வதிவிடங்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இப்பகுதிகளில் தற்போது மேற்கொள்ளப்படும் மிதிவெடி அகற்றும் பணிகள் இன்னும் இரண்டொரு நாள்களில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மிதிவெடி அகற்றும் பணிகள் முடிவடைந்ததும் தற்காலிக வதிவிடங்கள் அமைக்கும் பணிகளை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் - எனவும் அவர் தெரிவித்தார். (எ-12)

### ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு

# செலான் வங்கியின் யாழ்.கிளை வாடிக்கையாளர்களுக்கு வெகுமதி

## முகாமையாளர் கனகசிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே4-

செலான் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை தனது ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு விசேட வெகுமதிகளை வழங்கவுள்ளது.

நிலையான வைப்புகளுக்கான வட்டிவீதம் அதிகரிக்கப்படவுள்ளது. அத்துடன், எதிர்வரும் 12 ஆம் திகதியிலிருந்து யாழ்செலான் வங்கிக்கிளையில் தங்க நகைகள் அடைவுபிடிக்கும் சேவையும் இடம்பெறவுள்ளதாக அதன் முகாமையாளர் கே.கனகசிங்கம் தெரிவித்தார்.

தங்கநகை அடைவு பிடிக்கும் சேவைக்கு 18 வீத வட்டி அறவிடப்படும் 22 கரட் ஒரு பவுன் தங்கத்துக்கு ரூபா 5 ஆயிரத்து 750 வரை வழங்கப்படும். நிலையான வைப்புக்களில் ரூபா 5 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையான தொகைக்கு 8 வீத வட்டியும் - ரூபா ஒருலட்சம் முதல் ரூபா 5 லட்சம் வரையான தொகைக்கு 8.25 வீத வட்டியும் - அதற்கு மேலான தொகைக்கு 8.5 வீத வட்டியும் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வங்கிக் கிளையின் ஓராண்டு பூர்த்தியாவதை ஒட்டி விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து செலான் வங்கியின் பொது முகாமையாளர் திருமதி றோஸ் நாணயக்கார, பிரதிப் பொது முகாமையாளர் சார்லி டி சில்வா, வியாபார அபிவிருத்திப் பகுதி உதவிப் பொது முகாமையாளர் சேயோன் மற்றும் பிராந்திய முகாமையாளர்களான பி.நிரஞ்சன், ஏ.ஏ.இம்மானுவேல் ஆகியோரும் வருகைதரவுள்ளனர்.

(எ-10)

# தமிழினத்தின் துன்ப, துயரங்களோடு இரண்டறக் கலந்த ஆயரின் பணி



ஈழத் தமிழ் இனத்தின் ஆன்மீக பலத்தினதும், அறிவு வளத்தினதும், பண்பாடுப் பெருமையினதும் குன்றாத குறியீடாக ஒளி வீசிய தீபம் இன்று அணைந்துவிட்டது. இட்டு நிரப்பக்கூடிய இடைவெளியல்ல இந்தத் தமிழ்ப் பெருமகன் விட்டுச் சென்றது. எந்த ஆண்டில் (1972) தமிழ் இனத்தை இரண்டாம் நிலைக்குத் தள்ளிய அரசியல் அமைப்பு ஸ்ரீலங்கா அரசினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதோ அதே ஆண்டின் இறுதி மாதத்தில் யாழ்ப்பாணத் திருச்சபையின் தலைமைப் பொறுப்பினை ஏற்கும் பணியினை பாப்பரசர் பேராயர் தியோகுப்பிள்ளையிடம் ஒப்படைத்தார். 1970 களில் முதற் கூற்றிலிருந்த தமிழ்த் தேசிய எழுச்சி முனைப்புப் பெறத் தொடங்கியது. இதே காலப்பகுதியில் கிறிஸ்தவ வழிபாடுகளையும் சடங்காசாரங்களையும் தமிழ் மொழிவழிப் பண்பாட்டு மரபு முறைகளுக்கேற்ப மாற்றியமைதது, தமிழ்க் கலை, இலக்கியம், பண்ணிசை, அரங்காற்றுக்கலை போன்ற பாரம்பரியக் கூறுகளை ஆக்க பூர்வமான முறையில் கிறிஸ்தவத் தமிழ் வழிபாட்டுடன் இணைப்பதில் ஆயர் அவர்கள் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டார். இத்துறையில் அவரது பணியைத் தொடர்ந்தவர்களுக்கு உந்து சக்தியாகவும் ஊக்கமூட்டுபவராகவும் விளங்கிய தோடல்லாமல், மெதுவாக அழிவுற்று சிதைந்திருந்த நாட்டார் இலக்கியப் பண்புகளையும் குறிப்பாக அம்மானை இலக்கியப் பள்ளினையும் பாதுகாத்து, பதிப்பிக்கவேண்டிய தேவையை வலியுறுத்தினார். இந்தப் பூர்வீக இலக்கிய வடிவங்களுள் தேக்கியிருக்கும் தமிழ் இன வரலாற்றுக் கூறுகளை இனங்கண்டு ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அடிக்கடி நினைவூட்டினார். தனது சமயப் பணியின் பாரிய பொறுப்புகளை இனிமையாகத் தாங்கிய அதே வேளையில் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நீதியின், நியாயத்தின் - நிதானமான - நிதர்சனமான - உறுதியும் உரமும் கொண்ட குரலாக - அவர் ஓங்கி ஒலித்தார். ஜனநாயகம் என்பது தனித்துவமான இனத்துவத்தின் ஒருமித்த குரலாக அமைகின்றபோது அதனை சமய வேறுபாடுகளுக்கு அப்பால் ஓரினத்தின் குரலாகத் தெளிவாக எதிரொலிக்கவேண்டியதன் தேவையை உணர்த்தினார். ஆயர் அவர்களின் வாழ்வும், வழிபாடும், பொதுப் பணியும், சமூகப் பணியும் தமிழ்த் தேசிய வளர்ச்சியினது, வரலாற்றினதும் துயரங்களுடன் இரண்டறக் கலந்ததென்பதை ஈழத் தமிழ் இனம் என்றும் நினைவிற் கொள்ளும்.

**அருட்திரு. அ.ஜோ.சந்திரகாந்தன்**
*இணைப் பேராசிரியர்*
*ரொறன்ரோ பல்கலைக்கழகம்.*

★

## ஊழியர்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதில் அனுபவம் மிக்க ஊழியர்கள் (இருபாலாரும்) தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

*சிவா நறுமணப் பூங்கா*
288, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரத்துச் சந்தி அருகில்)
யாழ்ப்பாணம். ☎ 222 2567

(17489)



## CCS COLLEGE OF COMPUTER STUDIES

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

- ★ DIP. IN MS OFFICE
- ★ DIP. IN DESK TOP PUBLISHING
- ★ WEB DESIGN WITH HTML
- ★ HARD WARE
- ★ VISUAL BASIC, C ++, JAVA

புதிய பிரிவுகள் ஆரம்பம்
10.05.2003
12.05.2003 &
19.05.2003

பதிவுகளுக்கும் ஏனைய விவரங்களுக்கும்

302/1, NAVALAR ROAD,
ANAIPANTHI,
JAFFNA.

20% Discount

- Director.

(17501)



## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்தின் பனிக்கட்டித் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு, பனிக்கட்டித் தொழிற்சாலையில் வேலை செய்த அனுபவமுள்ளவர்களிடமிருந்தும் வேலை செய்யக்கூடியவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 08.05.2003ஆம் திகதிக்கு முன்னதாக எமது காரியாலயத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

முகாமையாளர்
*புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,*
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-27687)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் கனியென 07 - 07 - 1924

மண்ணில் விதையென 04 - 04 - 2003

### திருமதி வள்ளிப்பிள்ளை சண்முகம்

எமது நல்வாழ்விற்கு ஒளியேற்றி வைத்த அன்புத்தெய்வத்தை நினைவு கூருவதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராசலிங்கம் குடும்பத்தினர்
லிங்கம் றேடேர்ஸ்,
கொடிகாமம்.

"ஈஸ்வரி இல்லம்"
குடமியன், வரணி.

(17507)

## 31ஆம் நாள் நினைவலைகள்



மண்ணில் 30 - 01 - 1962

விண்ணில் 04 - 04 - 2003

### அமரர் ஐயாத்துரை முருகானந்தம்

(கிராம சேவை அலுவலர்)

ஆனந்தா உன்னைக் காணத் துடிக்கும் - உன்
நண்பர்களைப் பாராயோ?
கொஞ்சிக் குலாவிய நண்பர்கள் கூடித் தவிக்கின்றனர்!
உன்னோடு உறவாடிய உறவுகள் - உனை
எண்ணித் தவிக்கின்றன!
நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்.
*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*வடமராட்சி கிழக்கு.* - கிராம அலுவலக நண்பர்கள்.

(17499)

## கைதடியில் 'டெங்கு' ஒழிப்பு நடவடிக்கை

கைதடி,மே4

கைதடிப் பிரதேசத்தில் 'டெங்கு' நோயை தடுக்கும் முகமாக அதனைப் பரப்பும் நுளம்பை இனங்கண்டு அவற்றை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைதடிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் செ.சௌந்தரராசா தலைமையில் அப்பகுதி கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(எ-75)

## வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் சமையல்கூடம்

வடமராட்சி,மே4

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் நிக்கொட் உதவியுடன் 11 லட்சம் ரூபா செலவில் புதிய சமையல் கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

புதிய சமையல் கூடம் கட்டப்படுவதற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வெள்ளியன்று மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இதற்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

(எ-173)

## தென்மராட்சி அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே4

தென்மராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான மாதாந்த கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(எ)

## மாதிரிக் கிராமம் அமைக்குமாறு கோரிக்கை

குருநகர்,மே4

குருநகருக்கு தெற்குப் புறம் கடலுக்கு மத்தியில் அமைந்துள்ள சிறுத தீவை குருநகர் பகுதியுடன் இணைத்து அதனை மாதிரி மீனவக்கிராமமாக அமைக்க யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த மாதிரிக் கிராமத்தில் குருநகர் மீனவர்களை குடியேற்றி போக்குவரத்து, குடிதண்ணீர், சுகாதார வசதிகளையும் எதிர்காலத்தில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். அரச அதிபரிடம் கையளித்த ஒரு மகஜரில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

(ம-51)

## மவுன்கார்மேல் கலாசார மண்டபம் புனரமைப்பு

குருநகர்,மே4

குருநகர் மவுன்கார்மேல் கலாசார மண்டபம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது சேதமடைந்த இந்த மண்டபத்தைப் புனரமைக்கும் வேலைகளுக்கென இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் முந்நூறு பக்கட் சிமெந்து வழங்கியுள்ளார் என குருநகர் மவுன்கார்மேல் ஆலய பங்குச்சபை தெரிவித்தது.

(எ-51)

## கணனித் தரவு இயக்குநருக்கு நியமனக் கடிதங்கள்

தென்மராட்சி,மே4

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சினால் நடத்தப்பட்ட கணனி தரவு இயக்குநர் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் உள்ள அந்தந்த மாகாண அமைச்சு அலுவலகங்களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் பெற்றவர்கள் நாளை திங்கட்கிழமை சமுகமளிக்கவேண்டுமென அமைச்சின் செயலாளர் திருமதி க.சிவசிதம்பரம் அறிவித்துள்ளார்.

(எ-117)

## றோட்டறக்ட் - இன்றறக்ட் விருது வழங்கும் வைபவம்

2002 - 2003 ஆம் ஆண்டுக்கான றோட்டறக்ட் - இன்றறக்ட் கழகங்களுக்கான விருதுகள் 14.05.2003இல் றோட்டறிக் கழக ஆளுநா றொட்டேரியன் பத்மநாதன் அவர்களால் வழங்கப்படும்.

கழகங்களில் இருந்து விருதுபெறும் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்து 08.05.2003 இற்கு முன்

தலைவர்,
யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்,
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலதிக விவரங்களுக்கு பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

021 - 222 3754
0777-173540

(C/27688)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா நேற்று (03.05.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் கந்தையாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற முருகையாவின் சகோதரியும் Dr.நாகரட்ணம், குணரட்ணம், Dr.புஸ்பராணி ஆகியோரின் தாயாரும் வசந்தா, மகேஸ்வரி, தவராசசிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மலேசியாவில் நடைபெற்றன. இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'தேவிவாசா'*
*தியேட்டர் ஒழுங்கை,*
*இணுவில் கிழக்கு, இணுவில்.* (சி-27679)

தகவல்:
காந்திமதி முருகையா
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

## காசிநாதன் ஹரிச்சுந்தரா

யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் ஹரிச்சுந்தரா 02-05-2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு காசிநாதன் மற்றும் மாதற்கரசி காசிநாதனின் அன்பு மகனும் தில்லைநாயகி, கமலேஸ்வரி, ஸ்ரீபதிநாதன (கனடா), சாந்தினி, காந்திமதி, பானுமதி ஸ்ரீகாந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரங்கநாதன், பாலசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், கைலாசபிள்ளை ஸ்ரீரஞ்சினி, புஸ்பலதா ஆகியோரின் மைத்துனரும் பவகேசன், ஜெயந்தபவன், பிரதிபராஜ், செந்தூரன், நந்தலக்ஸ்மன், சபேசன், துர்க்காலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்ரீவினோத், லஷ்மவர்ணன், கஸ்தூரி, ஸ்ரீராஜ் ஆகியோரின் சிறிய தந்தையும் கஜானா, காயத்திரி, கவீனா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லமான 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டில் இன்று (04-05-2003) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*3ஆம் கட்டை, கல்வியங்காடு,*
*(பருத்தித்துறை வீதி),*
*யாழ்ப்பாணம்.* (17497)

தகவல்:
மாதற்கரசி
(தாய்)

## கந்தையா தனஞ்செயன்

வேலணை கிழக்கு, மணியகாரன் வீட்டடியைச் சேர்ந்த கந்தையா தனஞ்செயன் 30.04.2003 புதன்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயக்குமாரியின் கணவரும் பத்மறஞ்சன், தனுஷியா, அனுஷியா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் பவராசா (கொழும்பு), காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, நித்தியலட்சுமி, பராசக்தி, நடராசா மற்றும் தனலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி அன்னலட்சுமி பவராசா, காலஞ்சென்ற செ.சிவஞானசம்பந்தன் (சரவணையூர், இளைப்பாறிய அதிபர்), இ.சித்தானந்தன், ம.சிவசுப்பிரமணியம் (வட்டேமுல்ல), சி.தவராசா(கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2003) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

T.P.No: 001-416-7244668
(17510)

தகவல்:
தயாநிதி சண்முகநாதன்.

## திருமதி இராசமாணிக்கம் சிவப்பிரகாசம்

யாழ்ப்பாணம்,வடமராட்சி, தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 7 1/2, பாமன்கடை ஒழுங்கை, வெள்ளவத்தையில் தமது இறுதிக் காலத்தில் வசித்தவருமாகிய திருமதி இராசமாணிக்கம் சிவப்பிரகாசம் அவர்கள் 02-05-2003வெள்ளிக்கிழமை விண்ணுலகெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புத்திரியும் ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.சிவப்பிரகாசம் அவர்களின் அன்புப் பாரியாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம் விநாயகமூர்த்தி அவர்களின் சகோதரியும் சௌந்தரராஜன், கிருஷ்ணராஜா, காலஞ்சென்ற சிவலோகநாதன் ஆகியோரின் தாயாரும் தேவகி சௌந்தரராஜன், சாந்திமலர் கிருஷ்ணராஜன் ஆகியோரின் மாமியாரும் விதுலா, கவினா, சுகுணா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் "மகிந்த மலர்ச்சாலை" கல்கிசையில் இன்று (04.05.2003) ஞாயிறு பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7 1/2, பாமன்கடை ஒழுங்கை,*
*வெள்ளவத்தை.* (சி-27683)

தகவல்:
குடும்பத்தினர்.

## பிராந்திய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கல், யாழ். இராமநாதன் நுண்கலைக் கழகத்தினரின் நடன நிகழ்ச்சிகள், யாழ். மாவட்ட இந்து இளைஞர்களின் நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளுடன் பிராந்திய மாநாடு நிறைவு பெறும்.

(எ-152-10)


**ஸ்ரார் கல்வி நிலையம்**
சுன்னாகம் மல்லாகம்
**O/L DAY CLASS**
பிரிவு II
ஆரம்பம்:- 05.05.2003
காலை 8.00 மணி
(17490)


## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றும

திருமதி

**திலகராஜா ஜெகத்ஜனனி**

அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி பெருங்கவலையில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மாசாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை,*
*காரைநகர்.*
(சி-27694)
- நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த

**திருமதி திருஞானசோதி குணேந்திரன்**

(நீர்வேலி வடக்கு மகளிர் சி.க.கூ.ச. தலைவர், நீர்வேலி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், முன்னைநாள் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர்)

அவர்களின் திடீர் பேரிழப்பினால் நாம் கவலையும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீ முருகன்
நீர்வேலி தெற்கு மாதர் ஐ.நா.சங்கம்,
நீர்வேலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
(C-27693)


**BARATHY O/L Day Class**
சித்தன்கேணி நடைபெறுகின்றது
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்
☆ 90பேருடன் பிரிவு I இற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
**மீண்டும் ஒரு புதிய பிரிவு**
☆ பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பிரிவு ஆரம்பமாகின்றது.
புதிய அனுமதியினை 05.05.2003 இல் இருந்து பெற்றுக்கொள்ளவும்.
(சி-27685)



**உடனடி வேலை வாய்ப்புகள்**
யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட கொழும்பில் சொந்தமாக ENGINEERING கம்பனி நடத்துபவர் உடனடி வேலை வாய்ப்புகளை வழங்குகின்றார்.
- சாரதிகள் (DRIVER)
- இயந்திரவியலாளர் (MECHANICS)
- மின்னியலாளர் (ELECTRICIANS)
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். அனுபவம் வாய்ந்த தகுதியானோர் விண்ணப்பிக்க
உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**ADVERTISER**
**34, FRANK FORT PLACE,**
**COLOMBO - 04**
(17521)



**கடை, வீடு விற்பனைக்கு**
K.K.S.ROAD
JAFFNA
Contact:
07777 - 22564
021-222-2049
(இன்றில் இருந்து 3 தினங்கள் மட்டும்)
(17522)



**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்
A/L 2005 பௌதிகம்
அதிர்வுகளும் அலையியக்கமும்
BY: ஜெயசீலன்
ஆரம்பம் :
05.05.2003 Mon. 3.00
(17468)



**லிபேட்டி** அச்சுவேலி
மக்கள் திலகம் M.G.R. நடித்த
இரகசிய பொலீஸ் 115 (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
T.P.: 070 212223
திங்கட்கிழமை முதல் வசீகரா



**லஷ்சுமி** தெல்லிப்பழை
ரஜனி, சௌந்தர்யா, ரம்பா, ரகுவரன நடித்த
அருணாச்சலம்
தினசரி: 11.00, 3.00, 7.00
(17478)



**ராஜா** யாழ்ப்பாணம்
சரத்குமார், சிம்ரன், ரோஜா, வடிவேல்
இரசு
10.30, 1.30, 4.30
JURASSIC PARK 3
2 - 6 வரை இரவு 9.30 மட்டும்.



**நிறைஞ்சனாஸ்** சுன்னாகம்
விஜய், ரம்பா, ரகுவரன் நடித்த
என்றென்றும் காதல் (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force ஆக்சன்
நாளைமுதல் தில்லானா மோகனாம்பாள்



**நாகம்ஸ்** சுன்னாகம்
பிரசன்னா, கவிதா மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
(f)பைவ் ஸ்ரார்
தினசரி காட்சிகள் : (பிலிம்)
11.00, 3.00, 7.00 (பு.நே.)
நாளை முதல் இரகசிய பொலீஸ் - 115
(17512)


## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

**பதினெண் திங்கள்**



மலர்வு 1927 - 06 - 02
உதிர்வு 2001 - 11 - 07

அமரர்

**பொன்னையா பூவிலிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.பரியோவான் கல்லூரி)

முன்னை நாம் செய்த தவம்
உம்மைத் தந்தையாய் யாம் பெற்றோம்
மூவாறு திங்களான தே
முகம் தேடியலைகின்றோம் - அன்பு அப்பா!

**பன்னிரு திங்கள்**



மலர்வு 1935 - 07 - 10
உதிர்வு 2002 - 05 - 04

திருமதி

**மரியமுத்து பூவிலிங்கம்**

(இளைப்பாறிய உப அதிபர் - யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன், யா/வேம்படி மகளிர் கல்லூரி)

ஈரைந்து திங்கள் எமைச் சுமந்தாய் அம்மா
ஈராறு திங்களானதே - நீ மறைந்து
மாறா எம் ஆறாத்துயரம்
ஆற்ற நீ வாராயோ அன்பு அம்மா!

உங்கள் ஆன்மா ஆண்டவன் சந்நிதியில்
அமைதியுற அடைக்கல அன்னை அருள் புரிவாள்.

*இல:85, தேவாலய வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(17520)
உங்கள் நினைவில்
பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி

**திலகராஜா ஜெகத்ஜனனி**

அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி பெருங்கவலையில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை,*
*ஊர்காவற்றுறை.*
(சி-27692)
- நலன்புரிச் சங்கம்.

# மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெகத்ஜனனி திலகராஜா

*(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் - J/51, J/52)*

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகத்ஜனனி திலகராஜா அவர்கள் 02.05.2003 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் திலகராஜாவின் அன்பு மனைவியும், துவாரகா, துஷானி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் பூரணம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் மங்கையர்க்கரசியின் மகளும் வதனா (ஊழியர், வசந்தா பார்மஸி), சுதர்சனா, விணோதினி, ஜெகதீபன் ஆகியோரின் அருமை சகோதரியும் குமாரலட்சுமி, யோகசாகரன், சுந்தரலிங்கம், புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான புஸ்பராஜா, கிருபராஜா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான செவ்வேள், சொர்ணலிங்கம் மற்றும் மனோகரன், சச்சிதானந்தம், காலஞ்சென்ற ருக்மணி மற்றும் சாரதாம்பாள், கனகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரம்பன் மேற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பொன் மேற்கு,*
*ஊர்காவற்றுறை.*
(17530)
தகவல்:
திலகராஜா (கணவர்)

### தர்மலிங்கம் ஸ்ரீவரதலிங்கம்

*(வருமானவரி மேற்பார்வையாளர், உரும்பிராய் பிரதேசசபை)*

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ஸ்ரீவரதலிங்கம் 1.5.2003 வியாழக்கிழமை இருதய சுகவீனம் காரணமாக கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் சிவகுமாரியின் அன்புக் கணவரும் தர்சிகா, தெய்விகா, தனுசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர்களாகிய தர்மலிங்கம் - செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் சுன்னாகம் பிரபல வர்த்தகர் வைத்திலிங்கம், அமரத்துவமடைந்த இராசம்மா (ஆத்தைப் பிள்ளை) ஆகியோரின் அன்பு மருமகனும் ஸ்ரீதரலிங்கம் (கனடா), ஸ்ரீகாலிங்கம் (ஜேர்மனி), ஸ்ரீஜெயலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கோத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயனார் கோவிலடி,*
*சுன்னாகம்.*
(17524)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### கணபதிப்பிள்ளை சிவனேந்திரன் (பாபு)

பெரியமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை சிவனேந்திரன் நேற்று (03.05.2003) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (C.T.B) மற்றும் மகேஸ்வரி (கனடா) தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா, வசந்தாதேவி, மகேந்திரன் மற்றும் இந்திராதேவி, ராதாதேவி, இராசேந்திரன் (சோதி, கனடா), தெய்வேந்திரன் (அப்பன், லண்டன்), செல்வேந்திரன் (கனடா), ரவீந்திரன் (பிரதேச செயலகம், பளை), குலேந்திரன் (ரஞ்சன், பொறியியலாளர் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரமராசா (சின்னத்தம்பி, கட்டட ஒப்பந்தகாரர்), சபாநாதன் (G.S. பிரதேச செயலகம், சாவகச்சேரி), சுரேந்திரன் (C.E.B., யாழ்ப்பாணம்), தவமணி (கனடா), ரஞ்சினி (லண்டன்), மஞ்சுளா (கனடா), ஜெயரூபி, சுரேஸ்குமாரி ஆகியோரின் மைத்துனரும் வை.மார்க்கண்டுவின் (தாய்மாமன், பிரதேச செயலகம், சாவகச்சேரி) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அருந்ததி அகம்"*
*பெரியமாவடி,*
*சாவகச்சேரி.*
(17519)
தகவல்
சு.ரவீந்திரன் } சகோதரர்
சு.ராதாதேவி

### இராசரத்தினம் வரதராஜன்

கொக்குவில் கிழக்கு, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை சிலகாலம் வசிப்பிடமாகவும் ஜேர்மனி, பிராங்பேட்டை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் வரதராஜன் 28.04.2003 திங்கட்கிழமை ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.05.2003) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதி, காளி கோயிலடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (05.05.2003) திங்கட்கிழமை மாலை 4.00 (புதிய நேரம்) மணியளவில் அவரது ஞாபகார்த்த அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொற்பதி வீதி,*
*காளி கோயிலடி,*
*கொக்குவில் கிழக்கு.*
(17517)
தகவல்
குடும்பத்தினர்.

உதவி வழங்கும் மாநாட்டு முன்னேற்பாடுகளுக்காக

# ஜப்பானின் விசேட தூதர் அகாஷி நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்

கொழும்பு,மே4

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

கடந்த இரு தினங்கள் புது டில்லியில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்திய பின் நேற்றிரவு அவர் கொழும்பு வந்தார்.

இன்று பிரதமரைச் சந்தித்து அவர் பேசவுள்ளார். நாளை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடவுள்ளார். பின்னர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரையும் அவர் சந்தித்து பேசுவார்.

எதிர்வரும் 9ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர் எதிர்வரும் 7ஆம் திகதி வன்னி சென்று புலிகளின் தலைமையுடனும் பேச்சு நடத்துவார். (ம-3-12)

## பேச்சை மீள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுக்களில் கலந்து கொள்வதை விடுதலைப் புலிகள் அண்மையில் இடைநிறுத்தியிருந்தனர்.

இதனால், எழுந்துள்ள அரசியல் குழப்பநிலை குறித்து ஆராய்ந்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கலந்தாலோசிப்பதற்காகவே நோர்வேக் குழுவினர் இலங்கை வருகின்றனர். இந்தக் குழுவில் நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ரீசரும் இணைந்துகொள்வார்.

தற்போதைய அரசியல் நிலை குறித்தும் வருங்கால நடவடிக்கைகள் குறித்தும் தலைவர் வே.பிரபாகரனுடன் கலந்தாலோசிப்பதற்காக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நாளை வன்னிக்கு வரவுள்ளார்.

பேச்சுக்களை இடைநிறுத்துவதாக விடுதலைப் புலிகள் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்துக்கு அவர் அனுப்பிய பதில் குறித்து தலைவருடன் ஆலோசித்த பின்னர் பாலசிங்கம் பதில் கடிதம் ஒன்றை அனுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அன்ரன் பாலசிங்கம் வன்னியில் நிற்கும் சமயத்திலேயே நோர்வேக் குழுவினர் விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை மேற்கொண்டு முன்னெடுப்பது குறித்து ஆராய்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் பற்றி பிரதமருடனும் விடுதலைப் புலிகளின் தலைவருடனும் கலந்து பேசுவதற்காக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றாஸன் எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கை வருகிறார். அவரது விஜயத்துக்கு முன்னதாக, பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கு நோர்வேக் குழு முயற்சி செய்யும் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (ம-3)


SUBRA
Sithankerney
GRADE 6
ENGLISH
MEDIUM CLASS
Start on 5 th of May
(Monday 4.00 p.m.)
தரம் 6 மாணவர்களுக்கான
ஆங்கில மொழிமூல வகுப்பு
05.05.2003 இல்
ஆரம்பமாகிறது. (சி-27620)



NEW SCIENCE COLLEGE
2004
வெப்பவியல்
பிரிவு I: சனி, ஞாயிறு - 7 - 8 (a.m.)
பிரிவு II: திங்கள் 3.15 - 5 (p.m.)
மின்னியல்
திங்கள், புதன் - 6.15 - 7.15 (a.m.)
மின்புலம்
செவ்வாய், புதன் - 4 - 5 (p.m.)
அலகு ரீதியான மீட்டல் PAPER CLASS
பிரிவு (1) சனி, ஞாயிறு 10 - 11
பிரிவு (2) சனி, ஞாயிறு 12 - 1
2005
நியூட்டனின் விதி
செவ்வாய், வியாழன் 5 - 6 (p.m.)
பொறியியல்
சனி, ஞாயிறு 11 - 12
By: R.குகன் B.Sc. (17487)



துரித சாரதிப் பயிற்சி
குழுக்களாக குறைந்த கட்டணத்தில் உங்கள் பகுதிகளிலேயே ஒழுங்கான துரித வாகனப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (லைசன்ஸ்) விரைவில் பெற்றுக்கொடுக்கப்படும்.
தொடர்புகொள்ளுங்கள்:
★ கனன் தொலைத் தொடர்பகம் 535, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
★ தயூரி வீடியோ பஸ் நிலையம், அச்சுவேலி.
★ சந்தியா மல்ரி கோட்யாட் பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
★ கிருஷ்ணா ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, சங்கானை.
அடுத்த குழுவுக்கான பயிற்சி
மே 15 இல் ஆரம்பமாகும். (17350)


## பெண் அலுவலர் கொலை இளைஞர் விசாரணையில்!

யாழ்ப்பாணம்,மே4

நாரந்தனையில் நேற்று முன்தினம் பெண் சமுர்த்தி அலுவலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இளைஞர் ஒருவரைப் பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

சமுர்த்தி அலுவலரான திலகராஜா ஜெகத் ஜனனி என்ற இளம் குடும்பப் பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து ஊர்காவற்றுறைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் இளைஞர் ஒருவரைப் பொலீஸார் தீவிர விசாரணை செய்துவருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மரண விசாரணை ஊர்காவற்றுறை பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

இறந்தவரின் கணவன் சண்முகம் திலகராஜா சாட்சியம் அளித்தார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி தெரிவித்த நீதிவான், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ம-3-10)

## பேச்சுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேசித்துள்ள உதவிகள் குறித்தும் - பேச்சில் கலந்துரையாடப்பட்டது.

பேச்சின் முடிவில் ஊடகவியலாளர் மத்தியில் பேசுகையில் கஷனான தெரிவித்ததாவது:-

"நாம் புலிகளுடன் அந்தரங்கமாக சில விடயங்களை கலந்துரையாடி உள்ளோம். இலங்கையில் இடம்பெற்ற இரு பொதுத் தேர்தல்களில் நான் கண்காணிப்பு செய்பவராக கடமையாற்றி உள்ளேன். இலங்கையில் இடம்பெற்றுவரும் பிரச்சினைகள் குறித்து எனக்கு நன்கு தெரியும். தற்போது முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் இன்று கலந்துரையாடினோம். இன்றைய சந்திப்பு இலங்கை மக்களுக்கு பல நன்மைகளைக் கொண்டுவரும்" - என்றார் அவர். (ம-8-9)

## பேச்சை தொடர..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ எந்தத் தடைகள் வந்தபோதும் பேச்சு முன்னெடுக்கப்பட வேண்டும்.

★ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை இருதரப்பினரும் நிறைவேற்ற வேண்டும்.

★ மக்கள் போரையல்ல, சமாதானத்தையே விரும்புகிறார்கள். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான வழியாக இரு தரப்பினரும் போரைத் தேர்ந்தெடுக்கக்கூடாது.

★ மேலும் ஆழமாகவும், மேலும் சிரத்தையுடனும், அர்த்தமுள்ளதாகவும ஜனாதிபதியும் அவரது அரசியல் கட்சியும் சமாதான முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

★ தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் சமஷ்டித்திர்வின் கீழான உள்ளக சுயநிர்ணய உரிமை காலந்தாழ்த்தாது வழங்கப்பட வேண்டும்.

- ஆகிய கோரிக்கைகள் பேரணியின் முடிவில் வழங்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


எமது புதிய
வீடியோ CD வெளியீடு
புன்னகைப் பூவே
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
(17531) யாழ்ப்பாணம்.



அதிரடி வெளியீடு
நேற்று நடந்து முடிந்த
A/L GENERAL ENGLISH
வினாத்தாள் இன்றே உங்கள் கைகளில் விடைகளுடன்
தொகுப்பு:
க.தனேந்திரன்
B.Com (Hons), M.A.(Spl., Fi.N.Dip.in Acc.
பூபாலசிங்கம், சிறிலங்கா, சுப்பிரமணியம், துர்க்கா, நாவலர், பிரியங்கா, சித்திரப்பிள்ளை. (17529)


## கரவெட்டி பிரதேச சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த சமயம் வீதி மிக மோசமாகச் சேதமடைந்திருந்ததால் வாகனத்தை மெதுவாகச் செலுத்தியுள்ளனர்.

அச்சமயம், மோட்டார் சைக்கிளில வந்த இருவர் ஜீப்பைச் செலுத்தி வந்த ஜெயராசாவை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். துப்பாக்கிச் சன்னம் முகத்தில் பட்டு படுகாயமடைந்த ஜெயராசா உடனேயே சரிந்தார். பின்னர் ஜீப்பை நோக்கியும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் ஜீப் சேதமடைந்தது. எனினும், ஜீப்பிலிருந்த இருவரும் காயமின்றி தப்பிக்கொண்டனர்.

அதன் பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த பொலீஸார் ஜெயராசாவின் சடலத்தைப் பொறுப்பேற்றனர். யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்றிரவு 9.45 மணியளவில சடலம் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணம் என ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

தமது அமைப்பின் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதால தற்பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வழங்க வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை - இந்தச் சம்பவத்துக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று புலிகளின் வட்டாரங்கள கூறியதாக பி.பி.ஸி. தெரிவித்தது. (ம-3-12-173-182)

## பிரதமரின் கடிதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்று கொழும்பிலிருந்து வெளியாகும் அப்பத்திரிகையின் ஆசிரியபீட அலுவலர்கள் பலமான மறுப்பைத் தெரிவித்தனர்.

"பேச்சுக்களை இடைநிறுத்தும் எமது முடிவுக்கான காரணங்கள் தொடர்பாக பிரதமரின் பதில் சாதாரணமாகவே மிக முக்கியமான ஆவணம்" - என்று கூறும் அன்ரன் பாலசிங்கம் அக்கடிதத்தை தாங்கள் கடந்த செவ்வாயன்று பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்தார்.

"இக்கடிதம் மற்றும் அது தொடர்பான விடயங்கள் குறித்து புலிகளின் தலைமை வரும் நாள்களில் ஒன்றுகூடி கலந்துரையாடவிருக்கின்றது." - என்றும் அவர் சொன்னார். தமது இயக்கத்தின் சிரேஷ்ட அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்காக அடுத்தவாரம் தாம் வன்னி திரும்பவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் பதிலை அவர் ஏற்கனவே நிராகரித்துவிட்டார் என வெளியான பத்திரிகைச் செய்திகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர், "எந்த அடிப்படையும் இன்றி முற்றிலும் கற்பனையில் எழுதப்பட்ட அந்தச் செய்தி சமாதான நடவடிக்கைகளை எதிர்ப்போரின் நலனை மேம்படுத்தும் நோக்கம் கொண்டது." - என்றார்.

"ஆனால், சமாதான நடவடிக்கைகள் முழு இலங்கை மக்களையுமே பாதிக்கும் விவகாரம். பொறுப்பற்ற ஊடகமுறையால் தேவையற்ற இனக்குரோதம் வளர்ப்பதும், சமாதான முயற்சிகள் மற்றும் இனநல்லிணக்கம் பாதிக்கப்படுவதும் தவிர்க்கமுடியாததாகும்." என்றார் அவர்.

இவ்வாறு 'தமிழ் நெற்' இணையத்தளம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது. இந்த இணையத்தளச் செய்தியை 'டெய்லி மிரர்' பத்திரிகை நேற்று அப்படியே மறு பிரசுரம் செய்ததன் மூலம் நேற்று முன்தினம் தான் பிரசுரித்த செய்தியை திருத்த முற்பட்டுள்ளது. 'சுடர் ஒளி' பிரசுரிக்காத செய்தியை சுடர் ஒளி பிரசுரித்தது போலக் காட்டி அதன் பெயருக்கு களங்கம் கற்பிக்கச் சில ஊடகங்கள் முயல்வதாக 'சுடர் ஒளி' நிர்வாகப் பீடத்தினர் கவலை தெரிவித்தனர். (ம)


புதிய வீடியோ CD வெளியீடு
விக்ரம நடித்த
சாமி
(திரையரங்குகளுக்கு முன்னுரிமை)
புன்னகை பூவே
பிரதிகள் உடன் பெறலாம்
விஸ்ணு வீடியோ
K.K.S.ROAD,
கோண்டாவில். (சி-27695)



BITSMANS
கல்விநிறுவனம், மானிப்பாய்.
A/L 2005 * கணித, உயிரியல் * வகுப்புகள்
SUPER GRADE ஆசிரியர் குழு
பௌதிகம் : ஜெயசீலன்
இரசாயனம் : மகேஸ்வரன்
இணை.கணிதம் : பிரதீபன்.
உயிரியல் : ஞானேந்திரன். தயாபரன்
ஆரம்பம் : 05.05.2003 திங்கள் 4.30 p.m. (17465)



BITSMANS
கல்விநிறுவனம், மானிப்பாய்.
பிரிவு 2 O/L DAY CLASS
எமது வழமையான
SUPER GRADE ஆசிரியகுழு
ஆரம்பம்: 05.05.2003
திங்கள் 8.00 a.m.
(அனுமதியை முன்கூட்டியே பதிவுசெய்யவும்) (C/27461)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி திருஞானசோதி குணேந்திரன்

(ஞானம், தகவல் தொழில்நுட்பப் பூங்கா, நூலகர்)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த, திருமதி திருஞானசோதி குணேந்திரன் நேற்று (03.05.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருளம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் இராசரத்தினம் - ஞானபூங்கோதை (இணுவில்) தம்பதியினரின் அன்பு மருமகளும் குணேந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ.ச.) அவர்களின் அன்பு மனைவியும் யதுபாலன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), நிருபா (யா/இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (05.05.2003) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (17532)

தகவல்:
இ.குணேந்திரன் (கணவர்)

### செல்லப்பா ஐயம்பிள்ளை

(ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், பருத்திக்கலட்டியினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா ஐயம்பிள்ளை நேற்று (03.05.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் கணவரும் சிவசோதி (மலேஷியா), காலஞ்சென்ற ஜோதிசோதி, சுகுணா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜோதிலிங்கம் (B.Sc.-மலேஷியா), செல்வவிஜயசேகரன் (T.A., புல்லோட்டை), சிவகுமார் (B.A. ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), மயில்வாகனம் (M.P.C.S. சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் ஜோதிகிருஷ்ணன் (மலேஷியா), சிவாஜினி (மலேஷியா), ஜனகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம். (C/27496)

தகவல்:
சி.சிவகுமாரன்
(மருமகன்)


MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, வேல்மாடியில்)
இலவசக்கணினிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 07.05.2003 இற்கு முன் நேரில்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.